

முன்னேற்றப் பாதையில்

பிற்பட்ட வகுப்பினர்

முன்னேற்றப் பாதையில்
பிற்பட்ட வகுப்பினர்

கல்வி, தொழில், வேலை வசதி
உதவிகள், சலுகைகள்

தமிழரசு

16–4–1974 இதழின்

இலவச இணைப்பு

பிற்பட்டோர் நலத்துறை
இயக்குநர் அலுவலக முகவரி :

இயக்குநர்,
பிற்பட்டோர் நலத்துறை,
123, அண்ணாசாலை,
சென்னை-6.

பதிப்புரை

தமிழகத்தின் மொத்த மக்கள் தொகையில் சரிபாதிக்கு மேலிருக்கும் பிற்பட்ட வகுப்பினரின் முன்னேற்றத்தைக் கருதி, தனித் துறை அமைத்து தனி அமைச்சரின் பொறுப்பில் செயல்பட்டு வருவதில் தமிழகம் முன்னோடி மாநிலமாக விளங்குகிறது. பிற்பட்டோர் நலக் குழு அமைக்கப்பட்டு அதன் முக்கிய பரிந்துரைகள் செயல்படுத்தப்பட்டு வரும் கால கட்டத்தில் நாம் இருக்கிறோம்.

பிற்பட்ட வகுப்பினருக்காக 1948–49-ல் உபகாரச் சம்பளச் சலுகை வகையில் அரசு ஒதுக்கீடு ரூ. 1 இலட்சம் என்ற அளவில் இருந்தது. 609 பேர் அப்போது பயன் பெற்றனர். 1949–50-ல் இத் தொகை ரூ. 5 இலட்சமாக உயர்த்தப்பட்டு, 2908 பேர்கள் பயனடைந்தார்கள்.

பிற்பட்டோர் நலனுக்கு 1967–68-ல் செலவு ரூ. 161 இலட்சம் ஆக இருந்தது. ஆண்டுக்கு ஆண்டு இந்த ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டு 1973–74 திருத்தப்பட்ட மதிப்பீட்டின்படி இத் தொகை ரூ. 559 இலட்சமாக உயர்ந்தது. 1972–73-ல் மட்டும் 1,92,138 மாணவர்கள் உபகாரச் சம்பள வசதி பெற்றுப் பயனடைந்தனர். 1974–75-ம் ஆண்டு மொத்த ஒதுக்கீடு ரூ. 618 இலட்சமாகும்.


பிற்பட்ட வகுப்பினர் முன்னேற்றம் பெற, அதன் மூலம் மாநிலமும் நாடும் உண்மையான முன்னேற்றத்தை அடைய கல்வி, தொழில், வேலை வசதி, விவசாயம் ஆகியவைகளில் அரசு அளிக்கும் உதவிகள், சலுகைகள் ஆகியவற்றையும் சார்பான விளக்கங்களையும் தொகுத்துத் தருகிறது, இந்த வெளியீடு. தமிழ்ப் பெருமக்களுக்கு இது பெரிதும் பயன்படும் என்று நம்புகிறோம்.

சென்னை,
14–4–1974.

செய்தி--மக்கள் தொடர்புத் துறை,
தமிழ் நாடு அரசு.

109–79—1A

உள்ளுறை



பிற்பட்டோர் நலக் கருத்துரைக் குழுக் கூட்டம் 10—1—1974-ல் சென்னையில்
பிற்பட்டோர் நல அமைச்சர் திரு என். வி. நடராசன் அவர்கள்
தலைமையில் நடைபெற்றது.

முன்னுரை

பன்னெடுங்காலமாகச் சமுதாயத்தில்ஒருகணிசமான பிரிவினர் வாழ்க்கையில் இதர பிரிவினருடன் இணைந்து முன்னேற முடியாதவர்களாக இருந்து விட்டனர். இந்தத் தேக்கம், சமுதாய அமைப்பினாலும் அவர்கள் பரம்பரையாகச் செய்து வந்த தொழில்களினாலும் ஏற்பட்டதென்று கூறலாம். அதன் பயனாக பின்தங்கிய மக்கள், விவசாயம் முதலான இன்றியமையாத தொழில்களில் ஈடுபட்டு சலியா உழைப்பினை மேற்கொண்டிருந்தும்கூட, அவர்கள் கல்வியிலும் பொருளாதாரத்திலும் முன்னேறவில்லை.

இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் தோன்றி நமது மாநிலத்தில் ஆளும் பொறுப்பில் சில காலம் இருந்த 'நீதிக் கட்சி' பின்தங்கிய மக்களுக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் உத்தியோக வாய்ப்புக்களை ஓரளவுக்கு ஏற்படுத்திக் கொடுத்தது. இது இம் மக்களிடையே பெரிய விழிப்புணர்ச்சியையும் தன்னம்பிக்கையையும் தோற்றுவித்தது. இந்தச் சலுகையின் பயனாக இவர்களிடையே கல்வி, அதிலும் உயர் கல்வி கற்க வேண்டும் என்று ஆர்வம் தோன்றி வளரலாயிற்று. இது இம்மக்களிடை ஏற்பட்ட ஒரு வரவேற்கத்தக்க மாறுதல்.

இந்த பரபரப்பான மாறுதல் தொடர்ந்து வளர்ந்து பல துறைகளிலும் முன்னேற வேண்டும் என்ற ஆர்வத்தை வளர்த்தது. பின்னர் ஏற்பட்ட சுதந்திர இந்தியாவில் உண்டான அரசியல் மாறுதல்களும், விழிப்புணர்ச்சியும் இம்மக்களை அரசியலிலும் பெருவாரியாக ஈடுபட வைத்தது. இதனால் இவர்கள் அரசியலில் ஊடுருவி, தங்கள் உரிமைகளைக் கோரிப் பெறவும், அதைப் பாதுகாக்கவும் முடிந்தது. பிற்பட்ட இனத்தில் பலர் அரசியல் தலைவர்களாகவும், சிலர் அரசாங்கத்தில் பொறுப்புள்ள பதவி வகிப்பவர்களாகவும் இருப்பதை இப்போது பார்க்கிறோம். கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் உத்தியோகங்களிலும் இதர தொழில் வணிகத் துறைகளிலும் இப்போது பிற்பட்ட மக்கள் ஓரளவு அங்கம் வகிப்பதும் சமீப காலத்தில் ஏற்பட்ட வளர்ச்சியின் விளைவே. ஆயினும் இம்மக்களின் மொத்தத் தொகையை நோக்கும்போது இவர்களின் வளர்ச்சி, குறிப்பாக பொருளாதாரத்திலும் கல்வி கேள்விகளிலும் சிறப்புடையதாக இன்னும் அமையவில்லை.

நமது மாநிலத்தில் மொத்த மக்கள் தொகையில் ஏறத்தாழ 51 சத வீதம் மக்கள் பிற்பட்டவர்கள். இவர்களில் பெரும்பாலோர் கிராமப்புறங்களில் விவசாயம், கூலி வேலை மற்றும் சிறு

கைத்தொழில்களில் ஈடுபட்டிருப்பவர்கள். இவர்களை எண்ணிப் பார்க்கையில் இப்போது இம் மக்கள் பெற்ற வளர்ச்சி மிகக் குறைவானது என்பதும் இன்னும் இவர்கள் முன்னேற்றத்திற்குச் செய்ய வேண்டுவன மிக அதிகம் என்பதும் புலனாகும். இந்த நிலைமைகளை ஆழ்ந்து சிந்தித்த நமது அரசு, இம்மக்களுக்காகப் பாடுபட ஒரு தனி இலாகாவைப் புதியதாக ஏற்படுத்தியுள்ளது.

இந்த இலாகா பிற்பட்ட மக்களின் கல்வி மேம்பாட்டை முக்கிய குறிக்கோளாகக் கொண்டு ஏராளமான மக்களுக்கு உபகாரச் சம்பளம் மற்றும் இதர கல்விச் சலுகைகளை வழங்கி வருகிறது. ஆண்டுதோறும் இதற்காகவே ஏறத்தாழ ரூபாய் 400 இலட்சம் செலவிடப்படுகிறது. வீட்டு வசதி, தொழில் மேம்பாடு, பொருளாதார அபிவிருத்தி போன்ற துறைகளிலும் பிற்பட்ட மக்களுக்கென தனித் திட்டங்கள் தேவைப்படினும் நமது மாநில அரசு எந்தத் துறைகளில் வளர்ச்சித் திட்டங்களை வகுத்தாலும் அவை சமுதாயத்தின் பிற்பகுதியில் இருக்கும் ஏழை எளிய மக்களின் முன்னேற்றத்திற்கு வழி வகுக்கும் முறையில்தான் வகுக்கப்படுகின்றன. ஆகவே இதர துறைகளின் வளர்ச்சித் திட்டங்களும் பிற்பட்ட மக்களுக்குச் சாதகமானவையாகவே இருப்பதாகக் கொள்ளலாம்.

பிற்பட்டோர் நலப் பணிகளையும், பிற்பட்டோர் நலத் துறை ஏற்பட்ட பின்பு கடந்த நான்கு ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்ட சீரிய செயல் திட்டங்களையும் தொகுத்துத் தருகின்றது, இந்த வெளியீடு. மாநிலத்தில் பிற்பட்ட வகுப்பு மக்கள் முன்னேற்றத்திற்கு அளிக்கப்படும் வசதிகள், சலுகைகளைத் தெரிந்து கொள்ள இது பெரிதும் பயன்படும்.

(ஒ-ம்) என். வி. நடராசன்,
பிற்பட்டோர் நல அமைச்சர்.



சமுதாயப் புரட்சி

முதல்வர் டாக்டர் கலைஞர்

இன்றைய தினம் சமுதாயத் துறையில் ஒரு பெரும் புரட்சியை நாம் எதிர்பார்க்கிறோம். இந்தப் புரட்சி உருவாக வேண்டுமென்று அரசியல் சட்டத்திலேயே நாம் முன்னுரை எழுதி வைத்திருக்கிறோம். சமுதாய நீதி, பொருளாதார நீதி, அரசியல் நீதி இவையெல்லாம் வழங்கப்படவேண்டுமென்று அரசியல் சட்டத்தின் முன்னுரை கூறுகிறது. சமத்துவம், தோழமை, சம வாய்ப்பு இவைகளெல்லாம் தேவை என்று அரசியல் சட்டத்தின் முன்னுரை எடுத்துச் சொல்கிறது. ஆனால் அந்த முன்னுரையில் நாம் பொருளாதார நீதிக்கும் அரசியல் நீதிக்கும் முயற்சித்ததுபோல் சமுதாய நீதிக்கு முயற்சிக்கவில்லை.

சமுதாய நீதிக்கான அரிச்சுவடிப் பாடத்தைக் கூட நாம் இன்னும் முடிக்கவில்லை. சமநீதி, சம வாய்ப்பு இவைகள் வழங்கப்பட வேண்டுமென்று யோசிக்கிற நேரத்தில் ஒன்றைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

பலவீன மாணவர்களுக்கு முன்னுரிமை

ஓட்டப் பந்தயத்தில் கொஞ்சம் பலவீனமாக இருக்கின்றவனைக் கொஞ்சம் முன்னால் நிறுத்தி ஓடச் செய்வதைப் போல், சமுதாயத்தில் பலவீனமாக இருப்பவர்களுக்கு முன்னுரிமைகள், சலுகைகள் வழங்கப்பட்டாக வேண்டும்.

109—79—2

அப்படிப்பட்ட சலுகைகளை வழங்கி சமநீதியை உருவாக்கு வதற்கு முயற்சி செய்து வருகிறோம். அந்தக் காரியங்களை முழு வதும் செய்து முடிக்காவிட்டாலும் அதில் வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கிறோம். தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பின்தங்கிய மக்களுக்கும் வேலைவாய்ப்பு, கல்வி வசதி அளித்தல் இவைகளில் குறிப்பிட்ட சத விகிதத்தை நாங்கள் ஒதுக்கியிருக்கிறோம். கல்விச் சலுகை, கலைக் கல்லூரிகளில் மாத்திரமல்லாமல் மருத்துவக் கல்லூரிகளிலும் பொறியியல் கல்லூரிகளிலும் வழங்குகிறோம்.

இப்படி நாங்கள் பின்தங்கிய மக்களுக்கும் அரிசன மக்களுக்கும் வழங்குகின்ற சலுகையினுடைய விகிதாச்சாரம் 49 சதவிகித மாகும்.

தடைகளைத் தகர்ப்போம்

வேலை வாய்ப்புக்கள் மூலமும், கல்வி மூலமும் பொருளாதார ரீதியில் சமுதாயத்தில் உயர்வைத்தான் கொண்டு வர முடியும். ஆனால் சமூக நீதி பெறுவதற்கு சாதியின் பெயரால், மதத்தின் பெயரால், கடவுளின் பெயரால் உள்ள கட்டுப்பாடுகள் உடைத் தெறியப்படவேண்டும்.

உதாரணம் வேண்டுமென்றால், தாழ்த்தப்பட்ட தோழன் ஐ.ஏ.எஸ். அதிகாரியாக முடியும். ஆனால் கோவிலில் ஓர் அர்ச்சக ராக ஆக முடியாது. அப்படி அர்ச்சகராக ஆக முடியாத நிலைமை இன்னமும் இருக்கிறது.

ஆகவே, ஆண்டவனைப் பூசிக்கின்ற அர்ச்சனைகளைச் செய்வதில் தேர்ச்சி பெறுகின்ற தகுதி படைத்த யாராக இருந்தாலும், அவர் கள் எந்தச் சாதிக்காரராக இருந்தாலும், அர்ச்சகராக ஆகலா மென்று இப்பொழுது சட்டத்தைப் போட்டிருக்கிறோம்.

இந்தச் சட்டத்தின் மூலம் உயர்ந்த சாதிக்காரனும், பூசாரி யாகலாம். தாழ்ந்த சாதிக்காரனும் ஆண்டவனைப் பூசிக்கிற பூசாரியாகலாம். ஆனால் சில சனாதனிகள் அந்தச் சட்டத்தை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டிற்குப் போனார்கள். சுப்ரீம் கோர்ட் டின் தீர்ப்பின்படி அந்தச் சட்டம் இப்பொழுது எழுந்து நடமாட முடியாத நொண்டியாக இருக்கின்றது. அந்தச் சட்டம் எழுந்து நடமாட வேண்டுமேயானால் அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும்.

ஆலயப் பணியில் அரிசனர்

ராஜமான்யத்தை ரத்துச் செய்தது செல்லாது என்று சுப்ரீம் கோர்ட்டில் வழக்குத் தொடரப்பட்டு, சுப்ரீம் கோர்ட் ராஜ மான்ய ரத்து செல்லாது என்று தீர்ப்பு அளித்தது. ஆனால் கொள்கையை நிறைவேற்றுவதற்கு நாடாளுமன்றத்தில் புதிதாக ஒரு திருத்தம் கொண்டு வந்தார்கள். சில நூறு ராசாக்களுடைய பிரச்சினைக்காக அரசியல் சட்டத்தைத் திருத்திய போது, ஏன் பல கோடி தாழ்த்தப்பட்ட மக்களுடைய பிரச்சினைக்காக அரசியல் சட்டத்தைத் திருத்தக்கூடாது ?

தகுதியின் அடிப்படையில், மார்க்குகளைப் பெற்றவர்கள் கல்வியில் சலுகை பெற வேண்டும் என்று தமிழ் நாட்டிலே இருக்கிற பத்திரிகைக்காரர்கள் வாதாடுகிறார்கள். ஆனால் ஆண்டவனை வணங்குவதில் அர்ச்சகர்களுக்குத் தகுதி கூடாது; சாதிதான் தேவை என்கிறார்கள். மக்கள் ஆண்டவனின் குழந்தைகள் என்று சொல்கிறோம். எந்தத் தாயாவது இந்தக் குழந்தை தன்னைத் தொடலாம், இந்தக் குழந்தை தன்னைத் தொடக்கூடாது என்று சொல்லுவாளா ? சொன்னால் அப்படிப்பட்டவள் தாயாக இருக்க முடியாது. பேயாகத்தான் இருக்க வேண்டும்.

நெருப்பில் குளிக்க நந்தனுக்கு உத்தரவு

இரண்டாவதாக இன்னொரு புரட்சியைச் செய்திருக்கிறோம். ஆலயங்களை நிருவகிக்க உள்ள நிருவாகிகளில் கட்டாயம் ஒரு அரிசன வகுப்பைச் சேர்ந்தவரும் இருக்க வேண்டுமென்று இந்தியாவிலேயே தமிழ் நாட்டில் தான் விதி செய்திருக்கின்றோம்.

எவ்வளவு பெரியவர்களாக இருந்தாலும் எவ்வளவு வசதி, திறமை படைத்தவர்களாக இருந்தாலும் அவர்கள் சாதியின் பெயரால். தாழ்த்தப்பட்டவர், பின்தங்கியவர் என்ற பெயரால் ஒதுக்கப்படுவது நீண்ட காலமாக இருந்து வருகிறது.

தமிழ் நாட்டில் நந்தன் என்று ஒரு அரிசன பக்தன் இருந்தான். அவன் ஆண்டவனைத் தரிசிக்க கோவிலுக்குச் செல்ல நினைத் தான் அவன் தாழ்ந்த சாதி என்ற காரணத்தால் நெருப்பிலே குளித்து விட்டு உள்ளே வரவேண்டுமென்று உத்தரவு போட்டார்கள். அவன் நெருப்பிலே குளித்தான். நெருப்பிலே குளித்த பின்பு வெளியே வந்தானா வரவில்லையா என்று எனக்குத் தெரியாது.

அவதார புருஷனையும் ஆளவிடாத சாதி

யாதவர்களுடைய கடவுளான கிருஷ்ணனைப் பற்றிக்கூட ஒரு கதை சொல்லுவார்கள். அவன் திறமை படைத்தவன்; பெரிய ராசதந்திரி என்றெல்லாம் புராணம் சொல்லுகின்றது. ஆனால் அவன் யாதவ வகுப்பைச் சேர்ந்தவன். ஆகவே சத்திரியர்கள் தான் நாட்டை ஆளலாம் என்று சொல்லி, அவனுக்கு ஆளும் உரிமை இல்லை என்று கூறி விட்டார்கள்.

அதனால்தான் உத்தரப் பிரதேசத்தில் பிறந்த கிருஷ்ணன் அங்கே ராஜ்யத்தை அமைக்க முடியாமல், குஜராத்திற்குச் சென்று அங்கே துவாரகா என்ற புதிய ராஜ்யத்தை அமைத்தான். ஆக, சாதி வித்தியாசம் கிருஷ்ணன் என்ற அவதாரத்தையும் விடவில்லை.

சிவாஜிக்குத் தடை

மராட்டிய வீரன் சிவாஜி எதிரிகளை முறியடித்தவன். மாபெரும் நாட்டை உருவாக்கியவன். ஆனால் பட்டம் சூட்டிக்கொள்ளக் கூடாது என்று உயர்சாதிக்காரர்களால் தடுக்கப்பட்டான். அவன் 'யாகம்' செய்து சத்திரியனாக மாறினால்தான் அரசாளத் தகுதியுடையவன் என்று சொல்லப்பட்டான். ஆகவே, சாதி வித்தியாசம் சரித்திர காலம் தொட்டு இருந்து வருகின்ற ஒரு சாபக்கேடு.

சாதியை ஒழித்து, சமத்துவத்தை நிலை நாட்ட உதட்டளவு பேச்சுக் கூடாது. செயலில் காட்ட வேண்டும். நீ செய்து காட்டி இருக்கிறாயா என்று நீங்கள் என்னைக் கேட்பீர்கள்.

என் தந்தை செய்யத் தவறிய காரியத்தை நான் தந்தையாக இருந்து செய்திருக்கிறேன். என்னுடைய மகனுக்கு ஒரு அரிசனப் பெண்ணைத் திருமணம் செய்து வைத்தேன். அந்த வகையில் நான் அரிசனங்களுக்குச் சம்பந்தி.

என்னுடைய தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த போது கலப்புத் திருமணம் செய்துகொண்ட தம்பதிகளுக்குத் தங்கப் பதக்கத்தைப் பரிசாக அளிக்கின்ற ஒரு முறையை அரசாங்கத்தில் கொண்டு வந்தார்கள். அதை நாங்கள்

தொடர்ந்து அமுல் நடத்தி வருகிறோம். கலப்புத் திருமணம் என்றால் சர்மா வீட்டுப்பெண்ணுக்கும், சாஸ்திரி வீட்டுப் பையனுக்கு மல்ல. யாதவ வீட்டுப் பையனுக்கும், ''ஜாட்'' வீட்டுப் பெண்ணுக்குமல்ல; மாப்பிள்ளையோ அல்லது பெண்ணோ இருவரில் ஒருவர் கட்டாயம் அரிசன வகுப்பைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும். அதற்குப் பெயர்தான் கலப்புத் திருமணம். அவர்களுக்குத்தான் தங்கப் பதக்கம் பரிசு!

எளிய முறையில் திருமணம்

நாற்பது வருடங்களுக்கு முன்பே தமிழ்நாட்டில் ஒரு புதிய திருமணமுறையை நாங்கள் கண்டிருக்கிறோம். அதற்குச் சுயமரியாதைத் திருமணம் என்று பெயர். அதற்குப் புரோகிதர் கிடையாது. புரோகிதர் பார்வையாளராகத்தான் வருவார். மந்திரமில்லை. மந்திரம் சொன்னாலும் யாருக்கும் புரிவதுமில்லை. அக்னி சாட்சியில்லை. சாட்சிக்குக் கோர்ட்டுக்குத்தான் போகவேண்டும். திருமணத்திற்கு சாட்சி வரத்தேவையில்லை. மணமகனும் மணமகளும் மாலை மாற்றிக்கொள்வார்கள். சில நூறுபேர் முன்னிலையில் எளிய முறையில் திருமணம் நடைபெறும். இந்த முறையை பெரியார் ஈ. வெ. இராமசாமி அவர்கள் ஆரம்பித்தார்கள்.

இதற்கு ஆரம்பத்திலேயே பலத்த எதிர்ப்பு நாட்டிலே இருந்தது. சுயமரியாதைத் திருமணம் செய்து கொண்டால், புரோகிதர் இல்லாமல் திருமணம் செய்து கொண்டால், குழந்தை பிறக்காது என்று கூறினார்கள். நான் சுயமரியாதைத் திருமணம் செய்து கொண்டவன் தான். எனக்குக் குடும்பக் கட்டுப்பாட்டையும் மீறி ஆறு குழந்தைகள் இருக்கிறார்கள். புரோகிதத் திருமணம் செய்துக் கொண்டவர்கள் புத்திர பாக்கியத்திற்காக காசி, இராமேஸ்வரம் என்று அலைகிறார்கள். சுயமரியாதைத் திருமணம் செய்து கொண்டவர்களோ, போதும் போதும், இனிக் குழந்தைகள் வேண்டாம் என்று அலறிக் கொண்டிருக்கிறார்கள்.

சட்டம் இயற்றினோம்

இந்தச் சுயமரியாதைத் திருமண முறை, சட்டப்படி செல்லாத நிலைமை தமிழ்நாட்டில் இருந்தது. 1967-க்கு முன்பு காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் இந்தத் திருமணத்தை எல்லாம் சட்டப்படி

செல்லுபடி ஆக்கவேண்டுமென்று நாங்கள் ஒரு தீர்மானத்தைக் கொண்டுபோனோம். ஆனால் வாய் அளவில் சீர்திருத்தம் பேசுகிற காங்கிரஸ் ஆட்சி எங்கள் கோரிக்கையை நிராகரித்துவிட்டது. நாங்கள் ஆட்சிக்கு வந்த பின்பு சுயமரியாதைத் திருமணம் சட்டப்படி செல்லும் என்று சட்ட சபையிலேயே ஒரு மசோதாவைக் கொண்டு வந்து அதை நிறைவேற்றியிருக்கிறோம்.

இனிமேல் நடக்கின்ற சுயமரியாதைத் திருமணங்கள் மாத்திரமல்ல; இதுவரை நடந்திருக்கின்ற ஆயிரக்கணக்கான சுயமரியாதைத் திருமணங்களும் சட்டப்படி செல்லும் என்று அந்த மசோதா கூறியது. அதற்கான ஒப்புதலை அளிக்க மத்திய அரசு முதலில் தயங்கியது. அதற்காக எங்களுடைய சட்ட அமைச்சர் டெல்லியிலேயே தவம் கிடந்தார். கடைசியாக அதற்குச் சம்மதம் கிடைத்தது.

சமுதாயத்தில் நல்ல விழிப்புணர்ச்சி ஏற்படுத்துவதற்கு, கல்வியும் ஒரு கருவியாகும். ஆகவே தான் தமிழ்நாட்டில் புகுமுக வகுப்பு வரையில் நாங்கள் இலவசக் கல்வியை ஏற்படுத்தியிருக்கிறோம்.

பின்தங்கிய மாணவர்களுக்கும், அரிசன வகுப்பு மாணவர்களுக்கும் பட்டப் படிப்பில் 70 சதவீதம் தொகை வழங்குகிறோம்.

உயர்வது எப்படி ?

இப்பொழுது மத்திய அரசு வேலை வாய்ப்பில் அரிசனங்களுக்கு மாத்திரம் ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் ஒதுக்கியிருக்கிறது. இதைப் பிற்பட்டோருக்கும் அமுல் படுத்த மத்திய அரசு முயற்சிக்க வேண்டும். மத்திய அரசு அரிசனங்களுக்கு வேலை வாய்ப்பில் இடம் அளிப்பது போல, மத்திய அரசு வேலை வாய்ப்புகளில் இனிமேல் பின்தங்கிய வகுப்புக்கும் இடம் ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பின்தங்கியோர் நிலையை அறிய மாநில அளவிலே ஒரு குழுவைப் போட்ட முதல் மாநிலம் தமிழ்நாடு தான். அந்தப் பின்தங்கியோர் நலக்குழு செய்த பரிந்துரைகளை எல்லாம் ஏற்று படிப்படியாக நாங்கள் காரியங்களைச் செய்து வருகிறோம்.

பின்தங்கிய மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் இவர்களிடையே, ஒரு பத்துப் பேர் உயர்ந்து விட்டால் சமுதாயம் உயர்ந்து விட்டதாகப் பொருளல்ல. உயர்ந்து விட்ட அந்தப் பத்துப்பேரும் மிச்சமிருக்கின்றவர்களைக் கைதூக்கி விடப் பயன்பட வேண்டும்.

இப்போது உள்ள நிலைமை என்னவென்றால் ஒரு அரிசனச் சேரியிலே ஒரு வாலிபன் படித்து முன்னேறி உத்தியோகத்திற்குப் போய் விட்டால் உடனே தனது வீட்டை வேறு இடத்திற்கு மாற்றி விடுகிறான். அதற்குப் பதிலாக அவன் அந்த இடத்திலேயே குடியிருந்து தன்னைப் போலவே மற்றவர்களையும் உயர்த்திவிட அவன் முயற்சி செய்ய வேண்டும்.

ஒவ்வொருவரும் உயர்ந்த சாதிக்காரனாக ஆசைப்படக்கூடாது. எல்லோரும் மனிதர்களாக ஆக வேண்டுமென்றுதான் ஆசைப்பட வேண்டும்.

காந்தி—அம்பேத்கார்-அண்ணா

சாதி ஒழிய, சமத்துவம் நிலை நாட்டப்பட இந்தியப் பூபாகத்தில் பல பெரியவர்கள் வழிகாட்டியிருக்கிறார்கள். அந்தப் பட்டியலில் காந்தி அடிகளை மறக்க முடியாது. அம்பேத்காரை மறக்க முடியாது. தமிழ்நாட்டில் பெரியாரை, அண்ணாவை மறக்க முடியாது. பின்தங்கிய மக்களுக்காகப் பாடுபட வேண்டும் என்று ஒவ்வொருவரும் சபதம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

நான் சட்ட சபையிலே எடுத்துக் கொண்ட சபதம் "என்னுடைய ஆட்சிக் காலத்தில் பின்தங்கிய மக்களுக்காகவும் தாழ்த்தப்பட்ட மக்களுக்காகவும் என்னுடைய உயிரைப் பணயமாக வைத்து வாதாடுவேன், போராடுவேன்" என்பதாகும்.

தாழ்த்தப்பட்ட, பின்தங்கிக் கிடக்கிற சமுதாயத்திற்காக, மத்திய அரசினர், இரண்டு விஷயங்களை நினைவில் கொள்ள வேண்டும் என்று மீண்டும் ஒரு முறை கேட்டுக் கொள்கிறேன்.

"மத்திய அரசு வேலை வாய்ப்புக்களில் அரிசனங்களுக்கு ஒதுக்கப்பட்ட இடம் ஒழுங்காக முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட வேண்டும். இது ஒன்று."

"அதுபோல மத்திய சர்க்காருடைய உத்தியோகங்களில்—இனிமேல் பின்தங்கிய மக்களுக்கும் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு, இவ்வளவு இடம் என்று நிர்ணயிக்கப்பட வேண்டும். அதையும் மத்திய அரசு உடனடியாகச் செய்யவேண்டும்."

அலகாபாத்தில் 14—10—73-ல் நடந்த உத்தரப்பிரதேச அரிசனர்—பிற்பட்டோர் மாநாட்டில் நிகழ்த்திய உரைப் பகுதிகள்.

பின்னடைந்தோர் முன்னேற அரசு அளிக்கும் உதவிகள்

திரு என். வி. நடராசன்
பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர்

எந்த மாநிலத்திலும் இல்லாத முறையில் பிற்பட்டோர் நலனுக்கென தமிழக அரசு தனி இலாகா ஏற்படுத்தி அதற்கென தனியொரு அமைச்சரையும், தனியாகவே ஒரு இயக்குநரையும் நியமித்துள்ளதும் அவர்களின் நலனுக்கு அவசியமான வழிவகைகளை ஆராய்ந்து பரிந்துரைகள் செய்வதெற்கென ஒரு தனிக்குழு திருவாளர் ஏ. என். சட்டநாதன் அவர்கள் தலைமையில் அமைத்து அவர்களது பரிந்துரைகளின்மீது ஆவன செய்து வருவதும் அனைவரும் அறிந்த செய்தியாகும்.

1971-ல் தமிழகத்தின் மக்கள் தொகை 411 இலட்சம். இதில் பிற்பட்டோரின் தொகை மட்டும் 206 இலட்சம் என்று மதிப்பிடப்படுகிறது. ஏறக்குறைய சரிபாதி பிற்பட்டோர் எனக் கருதப்படும் பல்வேறு சாதியினரின் எண்ணிக்கையைக் கொண்டு இந்தக் கணக்கு எடுக்கப்பட்டு இருப்பினும், உழவர் பெருமக்கள், பட்டாளி மக்கள், நெசவாளர், தச்சர், அணிகலத் தொழிலாளர்கள் போன்ற உழைப்பாளர்கள்—ஏழை எளிய மக்கள் தான் பிற்பட்டவர்களாகத் திகழ்கிறார்கள். இப்போதுள்ள நிலைமையில் இவர்களை வரலாற்றின் அடிப்படையிலும், சமூக அமைப்பின் அடிப்படையிலும் அவரவர்கள் சாதியின் பெயரைக் கொண்டே நிர்ணயிக்க வேண்டியுள்ளது. இவர்களுடைய நல்வாழ்வைப் பொறுத்துத்தான் நாட்டின் முன்னேற்றம் உள்ளது என்றால் அது மிகையாகாது.

கல்வியில் தேய்மானம்

சரிபாதி மக்களின் கல்வி நிலையை நோக்கும் போது 1-8-1972 தேதியில் கல்வி இயக்குநரின் அறிக்கைப்படி 1-ம் வகுப்பில் படிக்கும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கையில் பிற்பட்டோர் எண்ணிக்கை 60 சதவீதம். அதேபோல் 5-ம் வகுப்பில் படிக்கும் பிற்பட்ட மாணவரின் எண்ணிக்கை 52 சதவீதம். 8-வது வகுப்பில் 51 சதவீதம்; பள்ளி இறுதி ஆண்டில் அதாவது 11-வது வகுப்பில் படிக்கும் பிற்பட்ட மாணவர் எண்ணிக்கை 47 சதவீதம் ஆகும். பிற்பட்டோர் கல்வி கற்க வரும் நிலைமை உயர் வகுப்புகளுக்குச் செல்லச் செல்ல குறைந்து கொண்டே வருகிறது. இதிலிருந்தே

109—79—3

இவர்களின் கல்வியின் பிற்போக்குத் தன்மை தெள்ளத் தெளி வாகும். இதற்கான காரணங்களை ஆராய்ந்து அதற்கான வழி வகைகளைக் காணுவது இன்றியமையாதது.

சாதிகளினால் மட்டுமல்லாமல் தாங்கள் வாழும் வசதியற்ற பிரதேசங்கள், அதிக ஊதியமும், வாய்ப்புகளும் இல்லாததான தொழில்களை மேற்கொண்டிருத்தல் முதலான காரணங்களால் பிற்பட்டவர்கள் சமுதாயத்திலும், பொருளாதாரத்திலும், பிற்பட்டவர்களாகவே இருக்கிறார்கள். பன்னெடுங்காலமாக, கல்வி யில் பெரும்பான்மையோர் போதிய அக்கறை காட்டாததினால், கல்வி கேள்விகளில் பிற்பட்டவர்களாகவே இருக்கிறார்கள். இந்த நிலை மாறுவதற்கு அடிப்படையான அவசியமான இன்றியமையாத வசதி கல்வியாகும். ஆனால் பிற்பட்ட சமூகங்களைச் சேர்ந்த பலருக்கு உயர்தரக் கல்வி கற்கப் போதுமான வாய்ப்புகளும் வசதிகளும் பல ஆண்டுகளாய் உருவாகவில்லை. ஆகவே, பிற் பட்டோர் நலன் எனும்போது அவர்கள் கல்வி பெற வசதியுடன் வாசித்து முன்னேற, அவசியமான உபகாரச் சம்பளம், உண்டி, உள்ளுறை போன்ற வசதிகளைத் தருவதிலும் படித்து முன்னேறிய வர்களுக்கு ஓரளவு அரசினரின் ஆதரவில் வேலை வாய்ப்புகள் கிடைக்கும் வகையில் ஒதுக்கீடுகள் செய்வதிலுமே முக்கியக் கவனம் செலுத்தப்படுகிறது.

பயனடைவோர் 2 இலட்சம்

அரைச் சம்பளச் சலுகை தவிர படிப்பு உதவி வகையில் உபகாரச் சம்பளங்கள் முதன் முதலில் *1948-49*-ல் ரூ *1* லட்சத்தில் ஆரம்பிக்கப்பட்டு மறு வருடம் அதாவது *1949-50*ல் ரூ. *5* லட்சம் ஆக அன்றைய சென்னை இராஜதானியில் உயர்ந்து நடைமுறை ஆண்டில் *356* லட்சமாக இன்றையத் தமிழகத்தில் உயர்ந்துள்ளது. இதனால் கடந்த ஆண்டுகளில் பயனடைந்தோரின் எண்ணிக்கை விவரம் பின்வருமாறு :—

உபகாரச் சம்பளம் பெற்றோர்—அன்றிருந்த சென்னை மாகாணத்தில்.

1948-49	.. ..	*609* பேர்.
1949-50-ல்	.. ..	*2908* பேர்.

இன்றையத் தமிழ் நாட்டில்

1960-61-ல்	.. ..	*19,856* பேர்.
1970-71-ல்	.. ..	*1,34,249* பேர்.
1971-72-ல்	.. ..	*1,68,975* பேர்.
1972-73-ல்	.. ..	*1,92,138* பேர்.

1968-69 வரை, ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகைக்குட்பட்டுத் தான் இவ்வுதவிகள் வழங்கப்பட்டன. ஒதுக்கீடு போதுமானதாக இல்லை என்ற நிலை வரும் சமயம் ஆயிரக்கணக்கானவர்கட்கு உதவி அளிக்க முடியாமல் போயிற்று.

எனவே இன்னும் விரிந்த அளவில் உதவி அளிப்பதற்காக பெற்ருேரின் முந்தய ஆண்டு வருமானம் ரூ. 2,000 க்குள் உள்ள, முந்தைய ஆண்டு இறுதித் தேர்வில் 40 விழுக்காடு மதிப்பெண்கள் பெற்ற அனைத்து பிற்பட்ட மாணவர்களுக்கும் உதவி அளிக்க வேண்டுமென்று 1969-ல் அரசு ஆணை பிறப்பித்தது. இதனுல் பயன் பெற்ருேரின் எண்ணிக்கை பெருமளவு உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும். ''பண ஒதுக்கீடு இல்லை'' என்ற காரணத்திற்காக யாருக்கும் கல்வித் தொகை மறுக்கப்படவில்லை என்பது மிக முக்கியமாக யாவரும் அறிந்துகொள்ள வேண்டிய ஒரு சிறப்பான மாற்றமாகும். மேலும் வருட வருமானம் ரூ. 2,500 க்கு மேல் ரூ. 6,000 வரை உள்ள பெற்ருேர்களின் பிள்ளைகளின் தொழிற் படிப்பிற்கு கடனுதவி ஆண்டு ஒன்றுக்கு ரூ. 500 வீதம் 1972-73 முதல் வழங்கப்படுகிறது. இவ்வுதவி நடப்பு ஆண்டில் 750 மாணவர்களுக்கு வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

1972-73-ம் ஆண்டில் படிப்பு உபகாரச் சம்பளங்கள் பெருமளவில் கொடுக்கப்பட்டிருக்கிறது. சுமார் 1,92,138 பிற்பட்ட மாணவர்கள் உதவி பெற்றிருக்கிருர்கள். அவர்களில் கல்லூரிப் படிப்பிற்கு 87,652 பேர் உதவி பெற்றுள்ளனர். ஆனுல் உதவி பெற்றவர்கள் அனைவரும் அதை நல்ல முறையில் பயன்



கோடம்பாக்கம், பிற்பட்ட வகுப்பு கல்லூரி மாணவர் இல்ல ஆண்டு விழா (11—3—1974) வில் பிற்பட்டோர் நல அமைச்சர் திரு என். வி. நடராசன் அவர்கள் பரிசுகள் வழங்கினுர்.

படுத்திக்கொண்டார்களா என்பது விவாதத்திற்குரிய பிரச்சினை ஆக ஆகிவிட்டது. படிப்பில் கவனமின்மை, முறையற்ற நடவடிக்கைகளில் ஈடுபாடு போன்றவைகளில் படிப்புச் சலுகை பெறும் மாணவர்கள் பெருமளவில் கலந்துக் கொள்கிருர்கள் என்ற கருத்து ஓரளவுக்குப் பரவி வருகிறது. அது எந்த அளவு உண்மை என்பது தெரியவில்லை. ஆனுல் அது உண்மையற்றதாக இருக்க வேண்டுமென்பதே என்னுடைய அவா. ஆனுல் அது உண்மையானுல் நாம் எல்லோருமே, குறிப்பாகச் சலுகை பெறும் மாணவர்களின் பெற்ருேர்கள் தீவிர கவனம் செலுத்தி நிலைமையைச் சீர் செய்ய வேண்டும். ''ஏதோ, படிக்கச் சம்பளமில்லை, சாப்பாடும் இலவசம், பையன் படித்தால் படிக்கட்டும், படிக்காவிட்டாலும் நமக்கு உபத்திரவம் இல்லை. அவனுக்கு வீட்டில் சோறு போட வேண்டிய செலவு மிச்சம்'' என்ற மனப் போக்கை வளர விடாமல் நமது எதிர்காலச் சந்ததிகளின் வளர்ச்சியைக் கண்காணித்து போதிய அறிவுரைகள் சொல்லி நன்ருகப் படிக்கச் செய்து அவர்களை முன்னேற்றுவிக்கும் பொறுப்பைப் பெற்ருேர்களும் ஏற்கவேண்டும் என்பது அரசின் எண்ணமாகும்.

படிப்பு உதவிகள் வழங்குவதின் நோக்கம், பிற்பட்ட ஏழை மக்கள் நல்ல முறையில் பயின்று, தக்க பதவிகளிலோ, தொழில்களிலோ அமர்ந்து எல்லா வகைகளிலும் முன்னேற்றம் காண வேண்டும் என்ற அடிப்படையில்தான். அவ்வித முன்னேற்றம் அடையும் வழிகளைப்பின்பற்ருது அவர்கள் வேறுவழிகளில் செல்வார்களேயானுல் திட்டமிட்டு உதவியதன் நோக்கம் சீர்குலைந்துவிடும். மேலும் சரிபாதி வகுப்பைச் சார்ந்த மக்கள் முன்னேறிஞல்தான் நாடு முன்னேறும். ஆகவே ''காற்றுள்ள போதே தூற்றிக்கொள்'' என்ற பழமொழிக்கிணங்க பிற்பட்ட வகுப்பைச் சார்ந்த பெற்ருேர்கள் தங்கள் பிள்ளைகளின் முன்னேற்றத்தைக் கருத்தில்கொண்டு, அரசு அளிக்கும் உதவிகளை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

இரண்டுங்கெட்டான் நிலை

பொருள் வசதியின்மை என்ற காரணம் மட்டுமின்றி பல்வேறு காரணங்களால் மாணவமணிகள், உயர்நிலைப்பள்ளி இறுதித் தேர்வு வரைகூடப் படிக்காமல் கீழ்வகுப்புகளிலேயே தங்கள் படிப்பை நிறுத்தி விடுகின்றனர். அம்மாதிரி சுமார் 8-வது வகுப்பு வரை படித்த மாணவர்கள், முன்போல் வயல்வெளிகளில் உழுது, பயிர் செய்வதிலோ, அல்லது உடலுழைப்பினுல் தச்சு, நெசவு போன்ற தொழில்கள் செய்வதிலோ ஈடுபட மறுக்கிருர்கள். இம்மாதிரி உருவாகும் மன நிலையையும் ஆராய்ந்து அது பற்றி என்ன செய்ய வேண்டும் என்பதையும் கவனிப்பது அவசியமாகும்.

பிற்பட்டோர் நலத்துறை துவக்கப்பட்ட காலத்தில், அதாவது 1969 ஆம் ஆண்டில், பதிஞேறு மாணவரில்லங்களே பிற்பட்டவர்களுக்கு இயங்கி வந்தன. அவைகளின் எண்ணிக்கை இன்று 144 ஆக உயர்ந்துள்ளது. இவ்வாண்டில் மட்டும் 21 இல்லங்களைத்

துவக்க அரசு ஆணையிட்டுள்ளது. இதனால் 9,348 மாணவர்கள் ஆண்டுதோறும் விடுதி வசதி பெறுவர். அரசு மாணவரில்லங்களுக்கு வசதியாக சொந்தக் கட்டடங்கள் இல்லாமல் அநேகமாக எல்லா விடுதிகளும் வாடகைக் கட்டடங்களில் நடத்தப்படுகின்றன. இந்தக் குறைகளைப் படிப்படியாகப் போக்க இவ்வாண்டு வீட்டுவசதி வாரியத்தின் மூலமாக தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து ரூ. ஒரு கோடி கடன் பெற்று 100 விடுதிகள் கட்டுவதற்குத் திட்டமிடப்பெற்று முன்னேற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

வங்கிகள் உதவி

பிற்பட்டவர்கள் சிறுதொழில் துவங்க தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து கடன் பெற உதவும் பொருட்டு வங்கிகளுடன் கலந்துபேசி ஒரு நடைமுறை வகுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பல்வேறு சிறுதொழில்கள், வியாபாரம் முதலியவற்றைத் துவக்க கடன் வசதி தேவைப்படும் பிற்பட்ட மக்கள், ஆங்காங்குள்ள மாவட்ட நல அதிகாரிகளின்மூலம் தங்களுக்குத் தேவைப்படும் கடன் தொகைக்கு, வங்கிகளுக்கு மனுச் செய்து கொள்ளலாம். மாவட்ட நல அதிகாரியின் பரிந்துரையுடன் வங்கிக்கு அனுப்பப்படும் மனுக்களின் மேல், இலகுவில் கடன்பெற இதனால் வழி ஏற்படுகிறது. இம்முறையில் இவ்வாண்டில் பல்வேறு தொழில்களுக்கு ரூ. 57 லட்சம் வரை 5,717 கடன்கள் பெற்றுள்ளனர்.

பிற்பட்டோர் நலக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் ஏற்கனவே 20 சாதிகளை, பிற்பட்டோர் பட்டியலில் அரசு சேர்த்துள்ளது.

பொதுவாக அடிக்கடி பிற்பட்டோர் நலக் கருத்துரைக் குழு முன் வற்புறுத்தப்படும் ஒரு கருத்து, உதவித் தொகை வழங்க இப்போது நிர்ணயித்துள்ள வருமான வரம்பை உயர்த்தவேண்டும் என்பதாகும். இந்த யோசனையை அரசு அனுதாபத்துடன் அணுகினும் இதனால் ஏற்படக்கூடிய பெருந்தொகையின் தேவையை எண்ணி இதைச் செயலாக்க முடியாமல் இருக்கிறது. இப்போதுள்ள வருமான வரம்பான ரூ. 2,000-த்திற்குள் மனுப்போடும் மாணவர்களின் தேவைகளை நிறைவேற்றிட நமக்கு நடப்பு ஆண்டில் சுமார் ரூ. 400 லட்சம் தேவைப்படுகிறது. அதுவும் தொடர்ந்து வளர்ந்து வரக் கூடியதாக இச்செலவு இருந்து வருகிறது. மேலும் வருமான வரம்பைத் தளர்த்தினால் ஏற்படக் கூடிய நிதித் தேவை பலமடங்காகலாம்.

ஆகவே அரசு, நன்றாகப் படிக்கக்கூடிய ஏழை மாணவர்களுக்காவது வருமான வரம்பைத் தளர்த்தி உதவித் தொகை வழங்கலாமா என்று யோசித்து வருகிறது.

மேலும் வசதி படைத்தவர்கள் சிலர், குறைந்த வருமானத்திற்குச் சான்றிதழ் பெற்று, உதவிகளைப் பெறுவதும் யாவரும் அறிந்ததே. இந்த மாதிரி தவறுதலாகப் பயன்பெறுவதால், உள்ளபடியே உண்மையான வருமானம் ரூ. 2,000-க்கு மேல் 3,000 அல்லது 4,000 வரை பெறும் அரசு ஊழியர்கள் இன்றைய பொருளாதார நிலையில் இத்துறையிலிருந்து சலுகை ஏதும் பெற முடியவில்லை. மேலும், சிலர் முன்னேற்றமடைந்த வகுப்பினராக இருந்தும், ''பிற்பட்டோர்'' என சான்றிதழைப் பெற்றுச் சலுகைகள் பெறுகின்றனர். இது, உண்மையான பிற்பட்டோரது முன்னேற்றத்தை மிகவும் பாதிக்கும். ஆகவே பிற்பட்ட வகுப்பினர் முன்னேற, ஏனைய முற்பட்ட வகுப்பினர் இச்சலுகைகளைப் பெறுவதைத் தடுக்க, வருமானத்தைக் குறைத்துக் கொடுக்கும் தீய பழக்கத்தை முறியடிக்க பிற்பட்டோர் நலக் கருத்துரை குழு உறுப்பினர்கள் தங்கள் மேலான கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

தவிர, சிறப்பாகவும் குறிப்பாகவும் மிகப் பிற்பட்டோராகிய சலவைத் தொழிலாளர்கள், சவரத்தொழிலாளர்கள், குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர் போன்றவர்களுக்குத் தொழிற் கருவிகள் வாங்கித் தருதல், சலவைத் துறைகளை அமைத்தல் முதலான உதவிகள் செய்யப்படுகின்றன.

கல்வி அல்லாத இதர உதவிகளைப் பொறுத்தவரை, நிலப் பட்டாக்கள் வழங்குதல், வீடு கட்டித் தருதல், தொழில் செய்யக் கருவிகள் தருதல், சிறு தொழில் செய்யக் கடனுதவி செய்தல், விவசாயம் செய்யப் பல்வேறு வகையில் உதவிகள் புரிதல், கிணறு வெட்ட மானியம் தருதல் போன்ற பொருளாதார வகைகளில் நமது அரசு செய்து வரும் பல்வேறு நன்மைகள் பெரும்பாலும் பிற்பட்டோர் நலனுக்கு ஏற்ற வகையில் அமைந்துள்ளன. அவற்றை நல்ல முறையில் பயன்படுத்திக் கொண்டு பொருளாதாரத்திலும் தொழில் வகையிலும் முன்னேற்றம் காணவேண்டும்.

தனி நிதி ஒதுக்கீடு

இது சம்பந்தமாக மத்திய அரசுத் திட்டக் குழுவினரும், தமிழ்நாடு திட்டக் குழுவினரும் ஒரு கருத்துத் தெரிவித்துள்ளனர். பிற்பட்டோர்களுக்கென தனியாகச் சில பல குறிப்பிட்ட காரியங்களுக்கும் சில அவசியமான திட்டங்களுக்கும் தனியாக நிதி ஒதுக்கீடு செய்வது ஒருபுறமிருக்க, ஏனைய துறைகளுக்கென ஒதுக்கீடு செய்யப்படும் நிதியிலிருந்து பிற்பட்டோருக்கு உபயோகமாக உள்ள அவசியமான திட்டங்களுக்கு கணிசமான ஒரு தொகை குறிப்பிடப்பெற்று, அதை அவர்களுடைய நலனுக்கெனச் செலவிட வேண்டும் என்பதே அந்தக் கருத்து. அதன் அடிப்

படையிலே ஒவ்வொரு துறையிலும் அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கப்பட வேண்டிய தொகையிலிருந்து எவ்வளவு பிற்பட்டோர் நலனுக்கென ஒதுக்க முடியும் என்பது பரிசீலிக்கப்படுகிறது.

வாய்ப்புப் பெறுத பகுதிகள்

பிற்பட்ட வகுப்பினர்களைச் சார்ந்த ஆங்காங்குள்ள சில குடும்பங்கள் நல்ல முறையிலே செல்வாக்குடன் இருப்பதையும் பார்க்கிருேம். ஆனல் அவர்களெல்லாம் வாழ்ந்த பிரதேசங்களில் நல்ல முறையிலே விவசாயம், தொழில், வியாபாரம் முதலியவற்றில் ஈடுபட்டு அதனல் பொருள் ஈட்டி வந்தார்கள். அதே போன்று வாய்ப்புகள், எல்லாப் பின்தங்கிய பிரதேசங்களுக்கும் வழங்குவது அவசியமாகும். பொதுவாக அந்த அடிப்படையில் நமது தமிழ் நாடு அரசு பல்வேறு திட்டங்கள் தீட்டியும் குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்பட்ட மக்கள், நடுத்தர வருமானம் உள்ளவர்கள் இவர்களுடைய நலனுக்கெனவே சிறப்பான திட்டங்கள் பல கொண்டு வந்திருந்தாலும் பிற்பட்ட மக்கள் அதிகமாக வாழ்ந்து வரும் பகுதிகளில் பல்வேறு வாய்ப்புகள் இல்லாமலிருப்பதும் கண்கூடு.

ஆங்காங்குள்ள ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாகச் செயல்படும் திட்டங்கள் இந்தப் பிற்பட்ட மக்களுக்குப் பெருமளவிலே இன்னும் பயன்படுத்தப்படவில்லை. ஆகவே இம்மாதிரி பிரதேசங்களை ஆராய்ந்து தேர்ந்தெடுத்து, அந்தந்தப் பிரதேசங்களுக்கு அவசியமான விவசாயத் திட்டங்கள் குறிப்பாக புஞ்சைப் பயிர்த் திட்டம், கால்நடை அபிவிருத்தித் திட்டம், பெரும்தொழிற்சாலைகள் ஏற்படுத்துதல் முதலான நல்ல திட்டங்களை உருவாக்கி அவற்றைத் தனிக்கவனத்துடன் நிறைவேற்றிஞல் ஓரளவுக்கு பிற்பட்ட மக்கள் பொருளாதாரத்தில் முன்னேற வாய்ப்புகள் இருக்கும் என்று எண்ணுகிறேன்.

அரசுப் பணிகளில் ஒதுக்கீடு

அரசுப் பணிகளுக்கு நபர்களைத் தேர்ந்தெடுப்பதில் பிற்பட்ட வகுப்பினருக்கென தனி ஒதுக்கீடு 1947-ல் ஏற்படுத்தப்பட்டது. இவ்வொதுக்கீடு தொழிற் கல்லூரிகளில்சேர் வதற்கும் பொருந்தும். இம்முறையை எதிர்த்து, 1950-ல் உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டு, இவ்வொதுக்கீடு அரசியல் சட்டத்திற்கு முரணனது என நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இத்தீர்ப்பை எதிர்த்து பலமான போராட்டம் மறைந்த மாவீரர் தந்தை பெரியார், மறைந்த மாமேதை அண்ணு, முதல்வர் கலைஞர் மற்றும் தலைவர்

களாலும் நடத்தப்பட்டு, அரசியல் சட்ட விதிகள் 15 (4)-ம் 16 (4)-ம் உண்டாக்கப்பட்டன. இதுவே அரசியல் சட்டத்தில் செய்யப்பட்ட முதல் திருத்தம். அவற்றின் அடிப்படையிலே தான் இன்று தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 18 சதவீதம் ஒதுக்கீடும் பிற்பட்டவர்களுக்கு 31 சதவீதம் ஒதுக்கீடும் ஏற்பட்டன. மக்கள் தொகையில் 50 சதவிகிதம் பேர் பிற்பட்டவர்களே. ஆனால் இன்றுள்ள நீதி மன்றங்களின் தீர்ப்புகளின் விளைவாக பிற்பட்டோரின் எண்ணிக்கைக்குத் தக்கபடி இவற்றை உயர்த்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

மேலும் இவ்வொதுக்கீடுகள் மத்திய அரசில் கிடையாது. அரசியல் சட்டம் 12, 16 (4)-ன் கீழ் இதை மத்திய அரசும் செயல்படுத்தலாம். ''மனம் இருப்பின் மார்க்கமுண்டு''. குழுவில் அங்கம் வகிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், இது சம்பந்தமாக நடவடிக்கைகளைப் பாராளுமன்றத்தின் மூலம் மேற்கொண்டால் பிற்பட்ட மக்களின் முன்னேற்றத்துக்கான பணிகளை வெகு விரைவில் நிறைவேற்றலாம்.

சிறப்புப் பயிற்சி நிலையம்

1969 ஜனவரி 1-ம் தேதி நிலவரப்படி தமிழ்நாட்டில் 153 ஐ.ஏ.எஸ் அதிகாரிகள் இருந்தனர். அவர்களில் பிற்பட்டோரின் எண்ணிக்கை 11. மக்கள் தொகையில் சரிபாதியாக இருப்பவர்கள் அடைந்தவை 7 சதவீதம் தான். இந்த நிலைமையை மாற்றியாக வேண்டும் என்பதற்காக மத்திய அரசு நடத்தும் ஐ.ஏ.எஸ். தேர்வுக்கும் ஐ.பி.எஸ். தேர்வுக்கும் பிற்பட்ட வகுப்பு மாணவர்களைத் தயார்ப்படுத்த, சிறப்பு பயிற்சி நிலையம் ஒன்றும் இந்தத் துறையினால் 1971-ல் ஏற்படுத்தப்பட்டது. முதலாவது ஆண்டில் 8 பேரே தேர்வில் கலந்து கொண்டனர். அவர்களின் 3 பேர் நேரடித் தேர்விற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு பின்னர் நேரடித் தேர்ச்சி பெற முடியவில்லை. இரண்டாவது ஆண்டில் 34 பேர் தேர்வு எழுதியுள்ளனர். மூன்றாவது ஆண்டுப் பயிற்சி நவம்பர் மாதம் துவங்கிவிட்டது.

ஆகவே பிற்பட்ட மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், ஏழை எளிய மக்கள் இவர்களின் நலனைக் கருத்திற் கொண்டு செயல்படும் இவ்வரசு, பிற்பட்டோர் நலனுக்கென கோடிக்கணக்கில் பணம் செலவிட்டு பல்வேறு பயனுறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. மேலும் நம் நாட்டு மக்கள், குறிப்பாக பின் தங்கிய மக்களின் நல்வாழ்வுக்காகச் செயல்படுத்த வேண்டுமெனத் தாங்கள் கருதும் எண்ணங்களையும், கருத்துக்களையும் குழுவில் எடுத்துக் கூற வேண்டுகிறேன்.

பிற்பட்ட மக்களின் நிரந்தரமான நல்வாழ்வுக்காக நம் அரசு செலவிடும் தொகையையும் பிற வாய்ப்பு வசதிகளையும் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டுகிறேன். நாட்டில் நடைபெறும் எந்தக் கிளர்ச்சியாயிருந்தாலும், பிற்பட்ட ஏழை எளிய மாணவர்கள் ஈடுபாடு கொள்வதை அவர்களாகவே சிந்தித்து ஆராய்ந்து சிறந்த பாதையில் சென்று, தாழ்த்தப்பட்டவர்கள்—பிற்படுத்தப்பட்டவர்கள் என்ற பேதா பேதங்களை முறியடித்து சாதி பேதமற்ற சமுதாயத்தை உருவாக்கிட வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

சென்னையில் 1974-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 10-ல் மாநில பிற்பட்டோர் நலக் கருத்துரைக் குழுக் கூட்டத்தில் பிற்பட்டோர் நல அமைச்சர் அவர்கள் உரை.

பிற்பட்டோர் நலப்பணி

அன்றும் - இன்றும்

தாழ்த்தப்பட்ட மக்களின் நல்வாழ்வைக் கண்காணிக்கும் பணி, அன்று, அன்றைய சென்னை மாகாணத் தொழிலாளர் நல ஆணையரிடம் இருந்தது. ஏனெனில் தாழ்த்தப்பட்ட மக்கள் பலரும் விவசாயம் போன்ற உடலுழைப்புப் பணிகளில் ஈடுபட்டிருந்தனர். அவர்களுடைய பின்தங்கிய நிலை, ஏழ்மை, குறிப்பாக அறியாமை ஆகியவைகளை மற்றவர்கள் பயன்படுத்திக் கொண்டு, உண்மையில் உழைப்பவர்களுக்கு உண்டான பங்குகளை நல்காமல் கொடுமைப் படுத்திய காலம் அது. ஆகவே அவர்களின் உழைப்பின் பயனைப் பாதுகாக்கும்வகையில் தொழிலாளர்களின் மேம்பாட்டிற்குச் சட்டங்கள் பல இயற்றப்பட்டன. ஆயினும் ஆணையர் முழுக்கவனம் செலுத்த முடியாததால் தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்தில் சுணக்கம் ஏற்படக் கூடாது எனக் கருதி, 1949 ஏப்ரல் 1-ஆம் நாள் அரிசன நல இயக்குநர் பதவி ஏற்படுத்தப்பட்டு, அவரிடம் அப்பணி ஒப்படைக்கப்பட்டது. அதுவரை தொழிலாளர் நல ஆணையரிடமிருந்த அப்பணி அரிசன நல இயக்குநருக்கு மாற்றப்பட்டது. அதே போல் குற்றப் பரம்பரைச் சட்டத்திற்கு ஆளாக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்வுத் திட்டங்கள் காவல் துறையினரிடம் இருந்த நிலை மாற்றப்பட்டு, அவைகளும் 1954-ல் அரிசன நல இயக்குநரின் கண்காணிப்புக்கு விடப்பட்டன.

அரைச் சம்பளம்

பிற்பட்ட வகுப்பினருக்கு அரைச் சம்பளச் சலுகை 1947–48 வரை இருந்தது. ரூ. 1 லட்சத்தில் படிப்பு உதவிப் பணம் வழங்கும் பணி 1948–49-ல் முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்டு தொழிலாளர் நல ஆணையரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. பின்னர் அதுவும் அரிசன இயக்குநருக்கு மாற்றப்பட்டது.

தாழ்த்தப்பட்டோர், பிற்பட்டோர் முன்னேற்றப் பணிகளை முனைந்து செயல்படுத்த அரசு எண்ணியது. அரிசன நலத் துறையின் பொறுப்பும் அதிகமாகியது. பிற்பட்டோரின் நலனைப் பாதுகாக்கவும் அவர்தம் முன்னேற்றமும் தாழ்த்தப்பட்டோரின் முன்னேற்றமும் விரைவில் நிறைவு பெறவேண்டும் என்பதற்கா

கவும் 'பிற்பட்டோர் நலத்துறை' புதிதாக 2—5—1969-ல் துவக்கப்பட்டது. பிற்பட்டோர், குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோரின் நலனைக் காக்கும் பணிகள், அரிசன நலத் துறையிலிருந்து பிரிக்கப்பட்டு, புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட பிற்பட்டோர் நலத்துறைக்கு மாற்றப்பட்டது. இதன் காரண மாக, இரு துறைகளும் தத்தம் பணிகளில் கணிசமான அளவில் விரைவும் முன்னேற்றமும் கண்டு வருகின்றன.

புதியதாகப் பிற்பட்டோர் நலத்துறை ஏற்பட்ட போதிலும், மாவட்ட அளவில் மாவட்ட நல அலுவலர்களே அரிசன நலம், பிற்பட்டோர் நலம் இரண்டையும் கண்காணித்து வருகின்றனர். 1971-ல் கோடைக்கானலில் கூடிய பிற்பட்டோர் நலக் கருத் துரைக் குழுவின் தீர்மானத்திற்கிணங்க மாவட்ட அளவில் பிற்பட்டோருக்கெனத் தனி அமைப்புகள் ஏற்படுத்தத் தமிழக நிருவாக சீர்திருத்தக் குழுவின் கருத்து கோரப்பட்டுள்ளது.

கல்விச் சலுகைகள்

ஏழைகளாக உள்ள பிற்பட்ட மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் ஆகியோருக்குக் கல்விச் சலுகைகள் வழங்கும் வகையில் கல்வித் துறை இயக்குநர் 1885-ஆம் ஆண்டில் சில குறிப்பிட்ட சாதிகளின் பட்டியல் தயாரித்திருந்தார். 1906 ஆம் ஆண்டு அச் சட்டத்தில் சில மாற்றங்கள் செய்யப்பட்டன. அம்மாற்றத்தில் தான் ' பிற்பட்ட வகுப்பினர் ' பட்டியல் தொகுப்பு முதன் முதலாக வெளியிடப்பட்டது. சமூகத்தில் பிற்படுத்தப்பட்ட, கல்வி முன்னேற்றம் இல்லாத, ஏழை எளிய பிரிவினரைத்தான் அதில் சேர்த்தனர். அதன்படி பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் பயிலும் இவ்வின மாணவர்களுக்கு அரைச்சம்பளச் சலுகை வழங்கப்பட்டது. பிற்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் இனங் களைச் சார்ந்தவர்களைத் தனித்தனியாகப் பிரித்து 1925 மே 19-ல் அரசு ஆணை (855) வெளியிடப்பட்டது. இதன்படி மதம் மாறிய தாழ்த்தப்பட்டவர்களுக்குக் கட்டணச் சலுகை வழங்கப்பட்டது. பிற்பட்ட வகுப்பைச் சார்ந்த மதம் மாறியவர்களுக்கு இச்சலுகை அளிக்கப்படவில்லை.

இச்சலுகைகளைப் பெற ஆண்டு வருமான வரம்பு வரை யறுக்கப்பட்டு ஆரம்பக்காலத்தில்ரூ. 600 ஆக வரையறுக்கப்பட்டு அவ்வப்போது உயர்த்தப்பட்டது. இன்று வரம்பு ரூ. 1,500 ஆக உயர்ந்துள்ளது. இவ்வரம்புக்குட்பட்ட பிற்பட்ட வகுப்பு மாணவ மாணவியர் கல்விக் கூடங்களில் சேர்ந்தவுடன் தமிழக கல்வித்துறைச் சட்டங்களின் 92-வது பிரிவின் கீழ் மனுச் செய்ய வேண்டும். மிகப் பிற்பட்ட வகுப்பைச் சார்ந்தவராயின் அவர் களுக்கு முழுச் சம்பளச் சலுகை 1957–58 முதல் கொடுக்கப் பட்டது. தற்சமயம் புகுமுக வகுப்பு வரை இலவசக் கல்வி யாதலால், இச்சலுகையின் பயன் புகுமுக வகுப்பிற்கு மேல் படிக்

கும் மாணவ மாணவியருக்குப் பயன் அளிக்கும். சிதம்பரம் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்திற்கு மட்டும், இச்சலுகையால் ஏற்படும் இழப்பு இத்துறையால் ஈடு செய்யப்படுகிறது. ஏனைய கல்விக் கூடங்களில் ஏற்படும் இழப்பைத் தமிழக அரசின் கல்வித் துறை ஈடு செய்கிறது.

படிப்புதவித் தொகை

பிற்பட்ட வகுப்பு மாணவ மாணவியருக்குத் தமிழக அரசின் கல்விச் சலுகை அதாவது பள்ளிக் கட்டணச் சலுகை ஒன்றுதான் 1947–48 முடிய இருந்தது. முதன் முதலில் 1948–49-ல் ரூ. 1 லட்சத்தில் படிப்பு உதவித் தொகை வழங்கும் முறை கைக் கொள்ளப்பட்டு 609 மாணவ மாணவியர் அன்றைய சென்னை மாகாணத்தில் பயன்பெற்றனர். மறு ஆண்டு 1949–50-ல் இத்தொகை ரூ. 5 லட்சமாக உயர்த்தப்பட்டு 2,908 பேர் பயனடைந்தனர்.

இந்த உதவியானது அரைச்சம்பளமும், சிறப்புத் தேர்வுக் கட்டணங்களும் அடங்கியதாகும். உண்டி, உறைவிடச் செலவிற்கான கட்டணங்களும் இவர்களுக்கு வழங்கப்பட்டது. அதாவது சென்ற 1970–71 வரை மாதம் ஒன்றுக்கு உதவி அளவு சென்னை நகருக்கு ரூ. 40-ம் பிற இடங்களுக்கு ரூ. 35-ம் ஆக இருந்தது. இவை 1971–72-லிருந்து கீழ்க்கண்ட முறையில் மாற்றப்பட்டு வழங்கப்படுகிறது:

உணவு உறைவிட உதவித் தொகை

பாட முறைகள் (1)	சென்னையில் பழையவிகிதம் பி.வ. (2)	சென்னையில் பழையவிகிதம் கு.ப. (3)	சென்னையில் புதிய விகிதம் பி.வ. (4)	சென்னையில் புதிய விகிதம் கு.ப. (5)	வெளியூர்களில் பழய விகிதம் பி.வ. (6)	வெளியூர்களில் பழய விகிதம் கு.ப. (7)	வெளியூர்களில் புதிய விகிதம் பி.வ. (8)	வெளியூர்களில் புதிய விகிதம் கு.ப. (9)
(திங்கள் ஒன்றுக்கு)	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.
1. கலை, விஞ்ஞானம்	40	60	60	70	35	50	50	55
2. மருத்துவம், பொறியியல், விவசாயம், கால்நடை மருத்துவம்.	40	70	60	75	35	70	55	70
3. தொழில் டிப்ளமா.	40	50	50	60	35	45	45	50

பி. வ. பின்தங்கிய வகுப்பினர்.
கு. ப. குற்றப்பரம்பரைச் சட்டத்திற்கு ஆளாக்கப்பட்ட வகுப்பினர்.

இந்த உண்டி உறையுள் கட்டணங்கள், மருத்துவர், வண்ணூர், மீனவர் சமுதாயத்தைச் சார்ந்த மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு அளிக்கும் விகிதத்தில் அளிக்கப்படுகின்றன.

மேலும் இப்படிப்பு உதவியானது, 1959—60 வரை நிதி ஒதுக் கீட்டிற்கிணங்கவே வழங்கப்பட்டது. பள்ளிப் படிப்பிற்கான உதவி களை மாவட்ட நல அலுவலர்கள் மாவட்டங்களிலும், சென்னையில் அரிசன நல இயக்குநரின் நேர்முக உதவியாளரும் வழங் கினர். கல்லூரிப் படிப்பிற்கான உதவிகளுக்கு, 57 குறிப்பிட்ட படிப்புகளுக்கு, சென்னையிலிருந்து அரிசன நல இயக்குநரின் நேர்முக உதவியாளரே வழங்கி வந்தார். இதில் கால தாமதம் ஏற்பட்ட காரணத்தால், உதவியின் பயன் காலாகாலத்தில் பயன் படும் வகையில் கிடைக்கச் செய்ய மாவட்ட நல அலுவலர்கள் தங்கள் மாவட்டத்தில் உள்ள கல்லூரி மாணவ மாணவியருக்கான உதவித் தொகை மனுக்களைப் பெற்று, 50 சதவீதம் மார்க்குகள் பெற்ற பிற்பட்ட மாணவர்களுக்கும் 45 சதவீதம் மார்க்குகள் பெற்ற மிகப் பிற்பட்ட மாணவர்களுக்கும் உதவித் தொகை வழங்க அரசு ஆணையிட்டது. சென்னை நகரக் கல்லூரிகளுக்கும் வரையறுக்கப்பட்ட கீழே கண்ட 57 பாட முறைகளுக்கும் இயக்குநரின் நேர்முக உதவியாளரே உதவி வழங்கிவந்தார் :—

படிப்பு வகைகள் :

1. பட்ட மேற்படிப்பு.
2. எம். வி. எஸ்.சி.
3. கம்மர்சியல் (தட்டச்சு, புக்கீப்பிங் முதலியன).
4. கம்பவுண்டர்
5. பி.எஸ்.சி. (விவசாயம்).
6. பி. டெக் (ஐ.டி.ஐ)
7. பி.டெக் (அழகப்பா காலேஜ் ஆப் டெக்னலஜி).
8. பி. டெக் (டெக்ஸ்டைல்).
9. பி.டெக் (கோவை டெக்னலஜி இன்ஸ்டிடீயூட்).
10. பி. ஆர்க்கிடெக்.
11. எம். எஸ்.சி. (அனடமி, பார்மகாலஜி, மைக்ரோ பாலஜி, பையோ கெமிஸ்டிரி, சென்னை மருத்துவக் கல்லூரி).
12. எம்.எஸ்.
13. ரேடியாலஜி—சர்டிபிகேட்.
14. ரேடியாலஜி—டிப்ளமா.
15. பி.எஸ்.சி. (பொறியியல், 3 வருடப் படிப்பு).
16. தமிழ்ப் புலவர் (வித்துவான்).

17. தமிழ்ப் பண்டிதர் பயிற்சி.

18. பி.டி. அல்லது பி.இடி.

19. பி. டி. (குறுகிய காலப் படிப்பு).

20. சட்டம் (சட்ட மேற்படிப்பு).

21. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இசைப் பயிற்சி.

22. அடையாறு இசைப்பள்ளியில் வித்துவான்.

23. அடையாறு கலாச்சேத்ராவில் சங்கீத சிரோன்மணி.

24. கூட்டுறவு ஆய்வாளர் பயிற்சி.

25. அரசியல் நிருவாகத்தில் டிப்ளமா.

26. டிப்ளமா—அந்த்ரபாலஜி (சென்னைப் பல்கலைக்கழகம்).

27. சென்னைப் பல்கலைக் கழகத்தில் பொருளாதாரம் அல்லது இந்திய சரித்திரம் அல்லது ஆர்க்யாலஜியல் ஆராய்ச்சி.

28. செரிகல்சரில் பயிற்சி.

29. சென்னை சேவாசங்கம், கோவை, பி. எஸ். ஜி. சேவாப் பயிற்சிப் பள்ளி, சென்னை ஸ்டெல்லா மேரீஸ் கல்லூரியில் டிப்ளமா படிப்பு.

30. பி. பார்மஸி.

31. டி . பார்மஸி.

32. டேராடூனில் உள்ள ராஷ்டீரிய இந்திய ராணுவக் கல்லூரியில் பயிற்சி.

33. மீனம்பாக்கம் விமானப் பயிற்சிப் பள்ளியில் பயிற்சி.

34. சென்னைப் பல்கலைக் கழகத்தில் பொருளாதாரத்தில் டிப்ளமா.

35. சென்னைப் பல்கலைக் கழகத்தில் புள்ளி விவர டிப்ளமா.

36. அண்ணாமலைப் பல்கலைக் கழக எம்.ஓ.எல்.

37. சென்னை மருத்துவக் கல்லூரியில் பி.டி.எஸ்.

38. குரோம்பேட்டை எம். ஐ. டி. யில் தொழில் நுணுக்கப் பயிற்சி.

39. நர்சஸ் கோர்ஸ்.

40. காந்தி கிராமத்தில் ரூரல் எஜுகேஷன் கோர்ஸ்.

41. பெரியநாயக்கன்பாளையத்தில் உள்ள ராமகிருஷ்ண வித்யாலயத்தின் ரூரல் ஹையர் எஜுகேஷன்.

42. ராமகிருஷ்ண வித்தியாலயத்தில் பொறியியல் டிப்ளமா.

43, தொழிற் பயிற்சி.

44. பாலிடெக்னிக் டிப்ளமா.

45. பி.எஸ்.சி. நர்சஸ்.

46. ராமகிருஷ்ண வித்தியாலயத்தில் கூட்டுறவு பட்ட மேற்படிப்பு.

47. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் கற்பிக்கும் முறையில் டிப்ளமா.

48. அடையாற்றில் உள்ள கமர்சியல் பிராக்டிஸ்.

49. பழங்கால சரித்திரம்/ஆர்க்யாலஜியில் எம். ஏ.

50. சமூக சேவையில் எம்.ஏ.

51. அண்ணாமலைப் பல்கலைக் கழக டிராயிங், பெயிண்டிங் டிப்ளமா.

52. பாளையங்கோட்டையில் பி. ஐ. எம்.

53. டிப்ளமா கோர்ஸ்—கமர்சியல் பிராக்டிஸ்—பெண்கள். பாலிடெக்னிக் அடையாறு, கோவை, மதுரை.

54. எம்.லிட்.

55. கிராப்ட் இன்ஸ்பெக்டர் பயிற்சி.

56. கிரிமினலஜியில் எம்.ஏ.

57. போஸ்ட் டிப்ளமா டவுன் பிளானிங்.

பிற்பட்ட, மிகப்பிற்பட்ட வகுப்பு மாணவர்களில் 50, 45 சதவீதம் மார்க்குகள் பெற்ற அனைவருக்கும் வருமான வரம்பிற்கு உட்பட்டவர்களுக்கு உதவி வழங்க முடியாத நிலை, நிதிநிலையின் காரணமாக ஏற்பட்டது. ஆகவே, நிதி நிலைக்கேற்பவே வழங்கும் உதவிகளின் எண்ணிக்கை இருந்து வந்தது,

வரம்புகளை நீக்கி உதவி

பிற்பட்டோருக்கென தனித் துறை 1969 மே மாதம் துவக்கப்பட்டவுடன் முதல் வேலையாக 40 சதவீதம் மார்க்குகள் பெற்ற ரூ. 1000 வருமானத்திற்குட்பட்ட பிற்பட்ட, மிகப் பிற்பட்ட மாணவ மாணவியர் அனைவருக்கும் எல்லாவித படிப்புகளுக்கும் உதவியளிக்க முற்பட்டது. குறிப்பிடப்பட்ட 57 பாடமுறைகளுக்கு உதவிபெறும் மாணவர் எண்ணிக்கைக்கு வரம்பும் நீக்கப்பட்டது.

இவ்விதம் முழுஅளவு உதவி காரணமாகப் பயனடைவோர் எண்ணிக்கை கணிசமான முறையில் உயர்ந்ததைக் கீழே காணும் விவரங்களால் அறியலாம்.

பிற்பட்ட வகுப்பினர் உதவி பெற்றோர் அளவு

ஆண்டு.	பள்ளிப் படிப்பு உதவி பெற்றோர்.	செலவு (ரூபாய் லட்சத்தில்).	கல்லூரிப் படிப்பு உதவி பெற்றோர்.	செலவு (ரூபாய் லட்சத்தில்).
(1)	(2)	(3)	(4)	(5)
1960–61 ..	10,621	4·03	9,235	36·86
1961–62 ..	14,874	5·22	11,167	42·19
1962–63 ..	18,954	6·08	12,612	49·05
1963–64 ..	17,200	4·72	14,600	58·11
1964–65 ..	14,300	4·51	17,100	65·59
1965–66 ..	12,944	4·57	18,431	68·47
1966–67 ..	10,306	3·66	21,099	79·24
1967–68 ..	10,075	3·70	25,260	88·08
1968–69 ..	20,375	6·54	33,162	106·53
1969–70 ..	42,515	14·76	48,050	146·10
1970–71 ..	74,842	25·17	59,407	201·20
1971–72 ..	92,694	33·47	76,281	260·33
1972–73 ..	1,04,486	34·57	87,652	290·08

குற்றப் பரம்பரைச் சட்டத்திலிருந்து நீக்கப்பட்ட வகுப்பினர் உதவி பெற்றோர் விவரம்.

1960–61 ..	2,176	0·84	595	2·86
1961–62 ..	4,988	1·45	715	3·56
1962–63 ..	6,664	2·25	829	4·17
1963–64 ..	5,640	2·33	825	3·84

1964–65 ..	*15,100*	*0·45*	*1,300*	*6·19*
1965–66 ..	*20,666*	*5·29*	*1,394*	*6·38*
1966–67 ..	*24,745*	*6·10*	*1,619*	*7·61*
1967–68 ..	*27,967*	*6·33*	*1,941*	*8·17*
1968–69 ..	*32,347*	*6·94*	*2,122*	*9·77*
1969–70 ..	*41,361*	*9·01*	*2,828*	*12·15*
1970–71 ..	*53,769*	*10·66*	*3,173*	*14·89*
1971–72 ..	*60,614*	*12·18*	*3,805*	*20·21*
1972–73 ..	*67,772*	*12·70*	*4,330*	*21·59*

எல்லா வகுப்பினருக்கும் இடம்

1956–57 முதல் தனியார் நடத்தும் மாணவரில்லங்களுக்கு உணவு மானியங்கள் வழங்குவதற்கான அங்கிகாரம் கொள்கை அடிப்படையில் கைவிடப்பட்டு, எங்கெங்கு மாணவர் இல்லங்கள் திறக்கப்பட வேண்டுமோ அங்கெல்லாம் திறப்பதற்கான கொள்கை வகுக்கப்பட்டது. அதன்படி அரிசன நலத்துறை மாணவரில்லங்கள் பல வருடா வருடம் திறக்கப்பட்டன. அவற்றில் ஒரு குறிப்பிட்ட விகிதாச்சாரம் பிற்பட்டோருக்கு ஒதுக்கப்பட்டது. இவ்வில்லங்களில் முன்னேறிய வகுப்பு மாணவர்களும் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இதன் அடிப்படை நோக்கம் தீண்டாமை ஒழிப்பே ஆகும். சின்னஞ்சிறு வயதில், பலதரப்பட்ட பல வகுப்பு மாணவர்களை அரிசன மாணவரில்லங்களில் சேர்ப்பதால் அம்மாணவர்களுக்குள் ஒற்றுமையும் சமத்துவ உணர்வும் ஏற்பட்டு தீண்டாமை அறவே ஒழியும் என்பதே இதன் கருத்தாகும். அம்மாணவரில்லங்களில் ஒதுக்கப்பட்ட இட விகிதாச்சாரம் வருமாறு :—

		சதவீதம்
அரிசனங்கள்	..	75
பிற்பட்டோர்	..	15
முன்னேறிய வகுப்பினர்.		10

மேலும் தனியார் நடத்திய மாணவரில்லங்களில் சரியான முறையில் பேணப்படாதவைகளை அரசு அரிசன நலத்துறை மூலம் தன்னகப்படுத்தியது. எங்கெங்கு பிற்பட்ட மாணவர்கள் பெருவாரியாக உள்ளனரோ அவை எல்லாம் பிற்பட்டோர் மாணவர் இல்லங்களாகப் பாவிக்கப்பட்டு கீழ்க்கண்ட முறையில் மாணவர்கள் சேர்க்கப்பட்டனர்.

		சதவீதம்
பிற்பட்டோர்	..	65
அரிசனங்கள்		25
முன்னேறிய வகுப்பினர்		10

இம்முறையின் கீழ் 1965--66-ல் எட்டு மாணவரில்லங்கள் 685 பேர் பயன்டையும் வகையில் இருந்தன. இவைகளின் எண்ணிக்கை 1966--67-ல் 11ஆக உயர்ந்தது. 979 பேர் பயனடைந்தனர். 1970--71-ல் இவற்றின் எண்ணிக்கை 28 ஆகி 1,769 பேர் பயன்பெற்றனர். மேற்கொண்டு ஏற்பட்ட வளர்ச்சி வருமாறு :—

	பள்ளி மாணவரில்லங்கள் எண்ணிக்கை.			கல்லூரி மாணவர் இல்லங்கள் எண்ணிக்கை.		
	ஆண்.	பெண்.	பயன் அடைந்தோர்	ஆண்.	பெண்.	பயன் அடைந்தோர்
1971--72 ..	59	8	4,073	13	1	1,260
1972--73 ..	80	9	4,213	30	4	2,395
1973--74 ..	91	10	5,878	36	7	3,470

ஆக இன்று 144 பிற்பட்டோர் மாணவரில்லங்கள் இயங்கி வருகின்றன. இவை தவிர, குற்றப்பரம்பரைச் சட்டத்திலிருந்து நீக்கப்பட்ட மாணவ மாணவியருக்கும் தனியாக மாணவரில்லங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. அவைகளில் கீழ்க்கண்ட முறையில் மாணவர்கள் சேர்க்கப்படுகின்றனர்.

		சதவீதம்
குற்றப் பட்டியலிருந்து நீக்கப்பட்டோர்	..	60
பிற்பட்டோர்	.. .. ..	10
அரிசனங்கள்	.. ..	25
முன்னேறிய வகுப்பினர்	.. .. ..	5

இவற்றின் வளர்ச்சி நிலை பின்வருமாறு:—

	இல்லங்களின் எண்ணிக்கை.	பயன் பெற்றோர்.
1966–67	37	3,619
1967–68	37	3,619
1968–69	37	3,619
1969–70	37	3,619
1970–71	40	4,039
1971–72	46	4,369
1972–73	46	4,369
1973–74	54	5,099

இம்மாணவரில்லங்கள் அந்தந்த மாவட்ட நல அலுவலரின்கீழ் இயங்குகின்றன. மதுரை மாவட்டத்தில் பிறமலைக்கள்ளர்களுக்கான இல்லங்களை மதுரை கள்ளர் சீரமைப்புத் துணை ஆட்சியர் கவனிக்கிறார். அவற்றை நிருவகிக்கும் ஊழியர்களின் சம்பளம், வாடகை, பிற சில்லரைச் செலவினங்கள் போக, உணவுக்கென்று 10 மாதங்களுக்கு நபர் ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு வழங்கப்படும் தொகை விவரம் வருமாறு :—

		மாதம் ஒன்றுக்கு.
		ரூபாய்
பள்ளி மாணவர் இல்லங்கள்—		
ஆண்கள் :	சென்னை ..	28
	பிற இடங்கள் ..	28
பெண்கள் :	சென்னை ..	29
	பிற இடங்கள் ..	29
கல்லூரி மாணவர் இல்லங்கள் :—		
ஆண்கள் :	சென்னை ..	49
	பிற இடங்கள் ..	39
பெண்கள் :	சென்னை ..	49
	பிற இடங்கள் ..	39
தொழிற்கல்வி மாணவர் இல்லங்கள் :—		
	சென்னை ..	49
	பிற இடங்கள் ..	38

பிற்பட்ட வகுப்பினர், குற்றப்பரம்பரைச் சட்டத்திலிருந்து நீக்கப்பட்ட வகுப்பினர் ஆகியோருக்காக, தனியார் நடத்தும் இல்லங்களுக்கு உணவு மானியம் மாதம் ஒன்றுக்கு ரூ. 20 விதம் 10 மாதங்களுக்கு ரூ. 200 வழங்கப்படுகிறது. அரசுக் கொள்கையின் காரணமாக அரசு மாணவரில்லங்கள் திறக்கப்பட்டு நடைபெறுவதால் தனியார் நடத்தும் இல்லங்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டு வருகிறது.

	இல்லங்களின் எண்ணிக்கை.	பயன் அடைந்தோர்.
(1)	(2)	(3)
1956–57-ல்	216	2,470
1973–74-ல்	56	2,865

சிறப்புப் பயிற்சி வகுப்பு

அரசுப் பணிகளில் முக்கியமாக ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். போன்ற பெரிய பதவிகளில் பிற்பட்ட மக்களின் எண்ணிக்கை மிகமிகக் குறைவு. வசதிக் குறைவின் விளைவான பல்வேறு சூழ்நிலைகளினால் இவர்கள் இதர முற்பட்ட மாணவர்களுடன்போட்டியிட்டு முன்னுக்குவர இயலாத நிலை இருப்பது மறுக்க முடியாததொன்றாகும். அப்



பிற்பட்ட வகுப்பினர் சிறப்புப் பயிற்சி வகுப்பு மாணவர்கள், நிறுவன முதல்வருடன்.

பதவிகளுக்கான தேர்வுகளுக்குத் தகுந்த பயிற்சி அளிக்க, உண்டி, உறைவிட சலுகைகளுடன், சென்னையில் பயிற்சி நிலையம் ஒன்றை பிற்பட்டோர் நலனுக்கென அரசு நிறுவியுள்ளது. பட்ட மேற் படிப்புப்பெற்ற, 25 வயதுக்குட்பட்ட பிற்பட்ட வகுப்பு மாணவர்கள் இதில் சேர்ந்து பயனடையலாம். இப்பயிற்சி நிலையத்தில், திறமை மிக்க பல பேராசிரியர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் குறிப்பிட்ட உயர் பாடங்களில் வகுப்பு நடத்தியும், விளக்கங்களைத் தந்தும், தனித் தனியே மாணவர்களின் சந்தேகங்களைப் போக்கியும் வினா-விடை; போட்டிகள் நடத்தியும் அறிவு வளர்ச்சிக்கு உதவி செய்கிறார்கள். அதுவுமில்லாமல் ஒரே குறிக்கோள் உள்ள மாணவர்கள் கூடிப் பயிலுவதால் ஒருவருக்கொருவர் கலந்து கொண்டு உரையாடியும் தங்கள் பேச்சுத் திறமையை அதிகரித்துக் கொள்கிறார்கள். இப் பயிற்சி நிலையம் வசதியற்ற பிற்பட்டவர்களுக்கு அரியதொரு வாய்ப்பைக் கொடுத்திருக்கிறது.

இவ்வகையில் கடந்த இரண்டு ஆண்டுகளில் பயிற்சி பெற்றோர் புள்ளி விவரம் வருமாறு :—

	1971–72.	1972–73.
அங்கீகரிக்கப்பட்ட மாணவர்கள் எண்ணிக்கை.	50	50
பயிற்சித் தொடக்கத்தில் அனுமதிக்கப்பட்ட பயிற்சியாளர்களின் எண்ணிக்கை.	12	67 (பகுதி நேர மாணவர்கள் சேர்த்து).
பயிற்சியை முடிக்காது இடையில் விலகியவர்கள் எண்ணிக்கை.	4	26
பயிற்சி முடிந்து அக்டோபரில் நடந்த தேர்வில் பங்கு கொண்டவர்களின் எண்ணிக்கை.	8	41
பங்கு கொண்டவர்களில் நேர்முகத் தேர்விற்குத் தகுதி பெற்றவர்கள்.	3	6
தேர்ச்சி பெற்றவர்கள்	இல்லை.	


இரண்டாவது பயிற்சி 1972 நவம்பர் மாதம் ஆரம்பமாகியது. 64 பேர் பயிற்சி பெற அனுமதி அளிக்கப்பட்டனர். அதன் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

முழுநேரப் பயிற்சியாளர்	57
பகுதிநேரப் பயிற்சியாளர்	7
மொத்தம் ..	64

இவர்களில் ஏழு பேர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.
இவர்கள் 1973 அக்டோபர் தேர்வில் பங்கு பெற்றனர்.
இவர்களில் 6 பேர்கள் நேர்முகத்தேர்வுக்குச் செல்லத் தகுதி
பெற்றனர்.

கல்வி அல்லாத இதர வகைகளில் நிலப்பட்டாக்கள் வழங்கு
தல், வீடுகட்டித் தருதல், தொழில் செய்யக் கருவிகள் தருதல்,
சிறுதொழில் செய்யக் கடனுதவி செய்தல், விவசாயம் செய்யப்
பல்வேறு வகையில் உதவிகள் புரிதல், கிணறு வெட்ட மான்யம்
தருதல் போன்ற பொருளாதார வகைகளில் நமது அரசு செய்து
வரும் பல்வேறு நன்மைகள் பெரும்பாலும் பிற்பட்டோர் நலனுக்
கும் முன்னேற்றத்துக்கும் ஏற்றவகையில் அமைந்துள்ளன. சிறப்
பாகவும், குறிப்பாகவும் மிகப் பிற்பட்டோராகிய சலவைத் தொழி
லாளர்கள், சவரத் தொழிலாளர்கள், குற்றப்பட்டியலிலிருந்து
நீக்கப்பட்டோர் போன்றவர்களுக்குத்தொழில் கருவிகள் வாங்கித்
தருதல், சலவைத் துறைகள் அமைத்தல் முதலான உதவிகள்
செய்யப்படுகின்றன.

சலவையாளர் சமூகத்தினர் [illegible] பிற்பட்ட வகுப்பினரில்
ஒரு பிரிவினர். இவர்களுடைய மக்கள் தொகை நமது மாநிலத்
தில் சுமார் 4·61 லட்சமாகும். சமுதாயத்துக்கு இவர்கள் ஆற்றி



பிற்பட்டோர் நல அமைச்சர் திரு என். வி. நடராசன் அவர்கள்
சலவைத் துறையைப் பார்வையிட்டார்.

வரும் பணி இன்றியமையாதது. இச்சமூகத்தினர் பன்னெடுங்காலமாக சலவை செய்வதையே தங்கள் குலத் தொழிலாக கொண்டுள்ளார்கள். இவ்வாறு இவர்கள் செய்யும் தொழிலுக்குப் போதுமான வசதிகள் இல்லாமல் அல்லல் படுகின்றனர். இதைக் கண்ணுற்ற தமிழக அரசு, இவர்களுக்கு வசதி மிக்க சலவைத்துறைகளை பரவலாகக் கட்டித் தர முடிவு செய்தது. இதன்படி முதற்கட்டமாக, மக்கள் நெருக்கமுள்ள நகராட்சிகள் உள்ள பெரிய நகரங்களிலும், நகரப் பஞ்சாயத்துக்கள் உள்ள சிறு நகரங்களிலும் சலவைத்துறைகள் கட்டுவது என்று அரசு முடிவு எடுத்து, இந்த ஏற்பாடு 1971-72-ம் ஆண்டு முதல் அமலுக்கு வந்தது.

சலவைத்துறைகட்ட முன்வரும் மேற்படி நகராட்சிகளுக்கு இந்த ஏற்பாட்டின்கீழ் சலவைத்துறை கட்டுவதற்காகும் மொத்தச் செலவில் பாதி மானியமாகவும் பாதி கடனாகவும் அரசு வழங்குகிறது. இதற்காக ஆண்டுதோறும் பிற்பட்டோர் துறை நிதியில் ரூ. 5 லட்சம் ஒதுக்கப்படுகிறது. இந்தத் திட்டத்தைப் [illegible]ன்[illegible]டுத்தி இதுவரை கீழ்க்கண்ட ஊராட்சிகள் நிதி உத[illegible]ற்று, சலவைத்துறைகள் கட்டிக் கொண்டுள்ளன.

உதவித்
தொகை.

சின்னாளப்பட்டி (மதுரை மாவட்டம்) .. .. ரூ. 43,900

அரியலூர் (திருச்சி மாவட்டம்) .. .. ரூ. 34,500

அன்னவாசல் (திருச்சி மாவட்டம்) .. .. ரூ. 3,000

இதைத் தவிர, கீழ்க்கண்ட நகரங்களில் இத்திட்டத்தின் கீழ் சலவைத்துறைகள் கட்டப்பட்டு வருகின்றன:— ஒரத்தநாடு, பேராவூரணி, சேலம், திருப்பூர், தேவதானப்பட்டி, சித்தையன் கோட்டை, கடலூர், உசிலம்பட்டி, அலங்காநல்லூர், கோம்பை, தேவாரம், அய்யம்பாளையம், திருத்தங்கால், இராமேசுவரம், பரமக்குடி, திருவைகுண்டம் ஆகியன.

தொழில் கருவிகள்

சலவைத் தொழிலாளருக்கும் மருத்துவர்களுக்கும் அவர் தம் தொழிலைத் தன்னிச்சையாகச் செய்யவும் அவர்களது உழைப்பின் பயனை ஏனையோர் சுரண்டும் நிலை கூடாது என்பதற்காகவும் 1960-71 ல் சேலம் மாவட்டத்தில் கீழ்க்கண்ட தொழில்களுக்குக் கடன் வழங்கப்பட்டது.

சலவைத் தொழிலாளர்களுக்கு ஒரு நபருக்கு ரூ. 150 வீதம் தரப்பட்டது. 50 பேர்கள் பயன் பெற்றனர். மருத்துவர் களுக்கு நபருக்கு ரூ. 250 வீதம் தரப்பட்டது. 50 பேர்கள் பயன் பெற்றனர். தையல் தொழில் செய்வோருக்கு ரூ. 400 வீதம் வழங்கப்பட்டது. 50 பேர்கள் பயன் பெற்றனர்.

1961-62 முதல் இத்திட்டம் திருத்தி அமைக்கப்பட்டு சென்னை நீங்கலாக மாவட்டம் ஒன்றுக்கு 100 சலவையாளர்களுக்கு நபர் ஒன்றுக்கு ரூ.50 வீதமும் மருத்துவத் தொழிலாளருக்கு, நபருக்கு ரூ. 53 வீதமும் கடன் 1965-66 முடிய அளிக்கப்பட்டது. 1966-67 முதல் இந்த வகையில் இலவசமாகக் கருவிகள் வாங்கி வழங்கப்பட்டது. மாவட்டம் ஒன்றுக்கு 60 சலவையாளர்களுக்கும் 60 மருத்துவர்களுக்கும் அளிக்கப்பட்டது. மேலும் சில கருவிகள் அதிகப்படியாக வழங்க வேண்டியிருந்ததால் தொகை சலவைத் தொழிலுக்கு நபர் ஒன்றுக்கு ரூ. 110 ஆகவும், மருத்துவர் தொழிலுக்கு ரூ. 75 ஆகவும் 1968-69 முதல் உயர்த்தப்பட்டது. உதவி பெறுவோர் எண்ணிக்கை மாவட்டம் ஒன்றுக்கு ஒவ்வொரு பிரிவுக்கும் நூறு என்று இருந்தது. இத் திட்டம் 1971-72-ல் முதன் முறையாக சென்னைக்கும் நீடிக்கப் பட்டது.

மாவட்டம் ஒன்றுக்கு தொழில் ஒன்றுக்கு 62 பேர் வீதம், சல வைத் தொழில் கருவிகளுக்கு ரூ. 170 ஆகவும் மருத்துவத் தொழி லுக்கு ரூ. 75 ஆகவும் உதவித் தொகை அளவு உயர்த்தப்பட் டது. 1972-73-ல் இத்திட்டம் அதே ரீதியில் நடத்தப்பட்டது. 1973-74-ல் இவ்விரு தொழிலாளர்களுக்கும் உதவி அளிக்க ரூ. 5 லட்சம் அரசினரால் வழங்கப்பட்டது. இதன்மூலம் 1973-74-ல் மாநிலம் முழுவதும் 2,041 சலவையாளரும் 2,040 மருத்துவர்களும் பயனடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒதுக்கீடு ரூ. 6 கோடி

இவ்விரு பிற்பட்ட வகுப்பினருக்கு 1960-61 முதல் 1965-66 வரை வழங்கிய கடன்கள் பலரால் திருப்பிச் செலுத்த இயலா மையைக் குறித்து 1968-ம் ஆண்டில் அரசு ஆணை பிறப்பித்தது. அதன்படி நிலுவைத் தொகை ரூ. 2½ லட்சம் மானியமாக மாற்றம் செய்யப்பட்டது. எனினும் இன்னும் சில மாவட்டங் களில் கணக்குப் புத்தகங்கள் சரிவர வைக்கப்படாததால் சுமார் 0·94 லட்சம் நிலுவையில் உள்ளது. இவற்றையும் மானியமாக மாற்ற சம்பந்தப்பட்ட மாவட்ட நல அலுவலர்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

பின்தங்கிய வகுப்பினர், குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட் டோர் ஆகியோரது முன்னேற்றத்திற்கான செலவு 1967-68-ல் ரூ. 161·40 இலட்சமாக இருந்தது. 1968-69-ல் ரூ. 187·09

இலட்சமாகவும், 1969-70-ல் ரூ. 265·46 இலட்சமாகவும் அதிகரித்தது. 1970-71-ல் ரூ. 320·14 இலட்சம் செலவழிக்கப்பட்டது. 1971-72-ஆம் ஆண்டில் ரூ. 432·57 இலட்சமாக இத்தொகை உயர்ந்தது. 1972-73-ல் ரூ. 485·86 இலட்சம் செலவழிக்கப்பட்டது. 1973-74 திருத்திய மதிப்பீடு ரூ. 559·82 இலட்சமாகும். 1974-75-க்கான மதிப்பீடு 608·06 இலட்சமாகும். இத்துடன் ''கடன்களும், முன்பணங்களும்'' என்ற தலைப்பின்கீழ் தனியாக ரூ. 9.25 இலட்சமும், ''கட்டிடச் செலவினம்'' என்ற தலைப்பின்கீழ் ரூ. 1.50 இலட்சமும் இத் துறைக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பிற்பட்டோர் நலனுக்கு. 1974-75-ஆம் ஆண்டிற்கான மொத்த ஒதுக்கீடு ரூ. 618.81 இலட்சங்களாகும். அரசு செலவிடும் தொகை படிப்படியே உயர்ந்து ரூ. 618 லட்சமாக ஆகியிருப்பதிலிருந்து பின்தங்கியோரின் நிலையை சீர்படுத்தி, வாழ்வை செம்மைப் [illegible]த்துவதில் பின்தங்கிய வகுப்பினர் நலத்துறை எய்திய [illegible] முன்னேற்றம் புலப்படுகிறது.

1973-ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் வந்த கருநாடக பின்தங்கிய வகுப்பினர் நலக்குழுவின் உறுப்பினர்கள் இம் மாநிலத்தில் பின்தங்கியோர் நலத்திற்காக செயல்படுத்தப்படும் திட்டங்களைத் திர ஆய்வு செய்தபின் பெருமளவு பாராட்டி, பின் தங்கியோருக்கான நல்ல தகவல்கள் பெற உதவியதென கருத்துத்தெரிவித்தனர்.

அரசுப் பணிகளில்

பின்னடைந்தோருக்கு ஒதுக்கீடு

அரசுப் பணிகளில் தங்களுக்குச் சரியானமுறையில் பிரதிநிதித்துவம்வேண்டும் எனக்கோரி பிராமணரல்லாதார் இந்நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தே போராட ஆரம்பித்தனர். இம்மக்களுக்குப் பொதுப் பணிகளில் சரியான பிரதிநிதித்துவம் வேண்டும் என்ற கோரிக்கையை பெரியார் அவர்கள் காங்கிரஸ் இயக்கத்தில் இருக்கும்போதே 1920 முதல் வலியுறுத்தி வந்தார்கள். அதற்குக் காரணம் பிராமணர்கள் அரசுப் பணிகளில் ஏகபோக உரிமையுடன் இருந்தனர் என்பதேயாகும். அரசும் அக்கோரிக்கைக்கு இணங்க பிராமணரல்லாதாருக்கு உரிய வாய்ப்புத் தரும் வகையில் 1921 ஆகஸ்டு மாதம் அன்றைய சட்டமன்றத்தில் ஒரு சட்டம் நிறைவேற்றியது. அரசுப் பணிகளுக்கு ஆட்களை நியமிக்கும்போது பிராமணர், பிராமணல்லாதார், முஸ்லீம், கிறித்தவர்கள் என்ற அடிப்படையில் ஒவ்வொரு சாராருக்கும் உரிய பிரதிநிதித்துவம் அளிக்க இந்தச் சட்டத்தில் வகை செய்யப்பட்டது. 1923-ம் ஆண்டு இருந்த வகுப்பு வாரி முறை வருமாறு:—

1. பிராமணர்கள்.
2. பிராமணரல்லாதார்.
3. இந்திய கிறித்தவர்கள்.
4. முஸ்லிம்கள்.
5. ஐரோப்பியர்கள், ஆங்கிலேயர்-இந்தியர்.
6. மற்றவர்கள்.

மேலே கண்ட வகுப்புகளில் 1, 3, 4, 5 ஆகிய வகுப்பினர் நீங்க 2, 6 வகுப்புகளின்கீழ் வரும் மக்கள் எண்ணிக்கை, மொத்த மக்கள்தொகையில் சுமார் 75 சதவிகிதம் ஆகும். இவர்களில் முன்னேற்றமடையாதோர், பிற்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் ஆகியோரும் அடங்குவர். இவர்களுக்கு என தனி ஒதுக்கீடுகள் இல்லை. ஆகவே இந்த வகையில் போதிய வாய்ப்புப் பெறாத மக்கள் தங்களுக்கு உத்தியோகங்களில் தனி ஒதுக்கீடு வேண்டும் என்று கிளர்ச்சி செய்தனர். இதன் விளைவாக அரசுப் பதவிகளில் கீழ்க்கண்ட பங்கீட்டு முறையைப் புகுத்தி அரசு 4—11—1927 தேதியிட்ட ஆணை (1071) பிறப்பித்தது:—

மொத்தப் பதவிகள் அனைத்துக்கும் 12 என்ற அடிப்படையை வைத்து ஒவ்வொரு பிரிவினருக்கும் கீழ்க்கண்ட விகிதம் வரையறுக்கப் பட்டது :—

1. பிராமணர் 2/12.
2. பிராமணரல்லாத இந்துக்கள் 5/12.
3. முஸ்லீம்கள் 2/12.
4. ஆங்கிலோ இந்தியரும் கிறித்தவர்களும்—2/12.
5. தாழ்த்தப்பட்ட வகுப்பினர் 1/12.

திரு. எஸ். முத்தையா

இந்த முறையை அமலுக்குக் கொண்டுவருவதில் மிகுந்த முனைப்பும் முயற்சியும் மேற்கொண்டவர் முன்னாள் அமைச்சர் திரு. எஸ். முத்தையா முதலியாராவார். இந்த் முறையின் கீழ் 1, 3, 4 இனங்களில் கண்ட மக்கள் அவர்களுடைய மக்கள் தொகை விகிதாச்சாரத்திற்கும் கூடுதலாகவே அரசுப் பதவிகள் பெறும் வாய்ப்பு இருந்தது. இந்த முறை தாழ்த்தப்பட்டோரின் பரிதாப நிலையைச் சீராக்குவதாகவும் இல்லை. இச்சலுகைகளின் காரணமாக 1-ஆம் இனத்தில் கண்ட மக்கள் வழக்கம் போல் தங்கள் பிள்ளைகளுக்கு உயர்கல்வி கற்பிக்கும் வசதியில் இருந்தனர். ஆனால் தங்கள் மக்கள் தொகைக்கு ஏற்ப உரிய இடங்கள் கிடைக்கப் பெறுத பிற்பட்ட, மற்றும் தாழ்த்தப்பட்ட மக்கள் மீண்டும் போராடினர். அதன் விளைவாக 1947-ல் அரசு ஆணை 3447 வந்தது. அதன்படி கீழ்க்கண்டமுறை அமுலுக்கு வந்தது. இதன் மூலம் மொத்தப் பதவிகள் 14 என்று அடிப்படை வைக்கப்பட்டு, பின்வருமாறு விகிதம் நிர்ணயிக்கப்பட்டது :—

1. பிராமணர்—2/14.
2. பிராமணரல்லாத இந்துக்கள்—6/14.
3. பிற்பட்ட இந்துக்கள்—2/14.
4. தாழ்த்தப்பட்டோர்—2/14.
5. ஆங்கிலோ-இந்தியரும் கிறித்தவர்களும்—1/14.
6. முஸ்லீம்கள்—1/14.

இம்முறை அரசியல் சட்டம் அமுலுக்கு வரும்வரை அமலில் இருந்தது. அரசு அலுவல்களிலும் கல்வி நிலையங்களிலும் ஆட்கள் இதன்படியே தேர்ந்தெடுக்கப்பட்டனர். இந்தமுறை கீழ்க்கண்ட வரிசைக் கிரமப்படி ஒரு சுழல்வட்டமாக அமைக்கப்பட்டு இருந்தது:—

1. பிராமணரல்லாத இந்து; 2. தாழ்த்தப்பட்டோர்; 3. பிற்பட்டோர்; 4. பிராமணரல்லாத இந்து; 5. பிராமணர்; 6. பிராமணரல்லாத இந்து; 7. முஸ்லீம்; 8. பிராமணரல்லாத இந்து; 9. ஆங்கிலோ—இந்தியர், கிறித்தவர்; 10. பிராமணரல்லாத இந்து; 11. தாழ்த்தப்பட்டோர்; 12. பிராமணரல லாத இந்து; 13. பிராமணர்; 14. பிற்பட்டோர்.

பதினொன்கில் இரண்டு இடங்களை மட்டுமே பிற்பட்டவர்கள் பெற்றிருந்தும் கூட, அரசியல் சட்டம் 16-ன் படி, இம்முறை தவறானது எனக் குறிப்பிட்ட வகுப்பைச் சார்ந்த ஒருவர் நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்ததன் விளைவாக இம்முறை இம் மாநிலத்தில் செல்லாதென நீதிமன்றத்தில் 1950-ல் அறிவிக்கப் பட்டது. நீதிமன்றம் அளித்த இந்தத் தீர்ப்பை எதிர்த்து பலத்த போராட்டம் பெரியார், அண்ணா, கலைஞர் மற்றும் பிற்பட்டோர் நலனில் அக்கறை கொண்ட அத்தனைத் தலைவர் களாலும் நடத்தப்பட்டது. பிற்பட்டோர், தாழ்த்தப் பட்டோரின் நலனைக் கண்காணிக்க இந்திய அரசு 1950 ஜூலையில் ஆணை பிறப்பித்தது. அதற்கு இணங்கவே அரசியல் சட்டத்தில் 15 (4) (16) (4) பிரிவுகள் ஏற்பட்டன. இதற்கிணங்க பிற்பட் டோருக்கு 25 சதவீதம் பங்கு இடங்களும் தாழ்த்தப்பட்டோருக்கு 16 சதவீதம் பங்கு இடங்களும் ஒதுக்கீடு செய்யப்பட்டன.

பின்னர் தமிழ்நாடு பிற்பட்டோர் நல ஆணைக்குழுவின் பரிந் துரைக்கிணங்க இந்த ஒதுக்கீடு முறையே 31 சதவிகிதமாகவும் 18 சதவிகிதமாகவும் உயர்த்தப்பட்டு 1971 முதல் இம்மாநிலத்தில் அமுலில் உள்ளது. அத்துடன் எஞ்சியுள்ள 51 சதவிகித இடங் களுக்கு இதர மக்களுடன் பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களும் போட்டியிடலாம். இந்த ஒதுக்கீடு முறை செவ்வனே செயல் படுத்தப்படுகின்றதா என்பதைக் கண்காணிக்க தாழ்த்தப் பட்டோரைப் பொறுத்தமட்டில் அரசு தலைமைச் செயலாளர் தலைமையில் சமூக நலத்துறை துணைச் செயலாளரால் ஆய்வு நடத்தப்பட்டு வருகிறது.

இதே போல் பிற்பட்ட மக்களின் ஒதுக்கீடுகள் சரிவர செயல் படுத்தப்படுகின்றனவா என்பதைக் கண்காணிக்க பிற்பட்டோர் நலத் துறை இயக்குநர் ஆய்வு செய்து அரசுக்கு அறிக்கை அனுப்பவேண்டும் என்று 1972 செப்டம்பரில் அரசு ஆணையிட்டது. இதற்கான விவரங்கள் துறைத்தலைவர்களிடமிருந்து சரிவர வராத தால், இந்த ஆய்வு இதுவரை செய்யப்படவில்லை.

சிறப்பு அலுவலர்

பிற்பட்ட மக்களின் தொகை, மொத்த மக்கள் தொகையில் சரிபாதி. ஆகவே அவர்களுக்கான பிரதிநிதித்துவம் சரியான முறையில் கடைப்பிடிக்கப்பட்டுள்ளதா என்பதை ஆய்வு செய்ய தில் துறை இயக்குநருக்கு உதவ சிறப்பு அலுவலர் ஒருவரை நியமிக்க 1973 டத்தியில் அரசு ஆணையிட்டது. இந்தப் பதவி இதுவரை நிரப்பப்படவில்லை. பிற்பட்ட வகுப்பு மாணவர்கள் கல்வி நிலையங்களில் எந்த அளவில் சேர்க்கப்படுகின் றனர் என்பதை ஆராய்வதும் இந்த சிறப்புஅலுவலரின் பணியாகும் ஒட்டு மொத்தமாக பிற்பட்டோர் எவ்வளவு பேர் அரசு, நகராட்சி,



பிற்பட்ட வகுப்பு மாணவர்கள் சிறப்புப் பயிற்சி வகுப்பு

மற்றும் ஊராட்சிப் பணிகளிலும் கல்லூரிகளிலும் சேர்க்கப்பட்டுள்ளனர் என்பதையும், எவ்வெவ்வகுப்பு அதில் அதிக முன்னேற்றத்தை அடைகிறது என்பதையும் குறித்து பிற்பட்டோர் நலக் குழுவின் பரிந்துரை எண் 91-ன்படி இந்தச் சிறப்பு அலுவலர் விவரங்களைச் சேகரிப்பார். அப்படிச் சேகரிக்கப்பட்ட விவரங்களை பிற்பட்டோர் நலத்துறை இயக்குநர் அரசுக்கு தனது பரிந்துரைகளுடன் அனுப்பவார். இப்படி அனுப்பப்படும் அறிக்கை முந்திய ஆண்டு, நடைமுறை ஆண்டு, இரண்டையும் ஒப்பிடும் முறையில் அமையும். இந்த முறை ஒவ்வொரு வகுப்பினர் முன்னேற்றமும் ஒவ்வொரு பணியிலும் எந்த அளவில் வளர்ச்சி பெறுகிறது அல்லது தேக்கம் கொண்டிருக்கிறது என்பதைத் தெளிவுபடுத்தும்.

ஆய்வுக் குழுக்கள

பிற்பட்டோர் நலன்களை ஆராயவும், அவர்தம் முன்னேற்றத்துக்கான வழிவகைகளைக் கூறவும், 1949 அக்டோபர் 22-ம் நாள் முதன் முதலாக அரசு ஒரு குழுவை ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் தலைமையில் அமைத்தது. இக் குழு முதலில் ஓராண்டுக் காலத்திற்கு நியமிக்கப்பட்டது. அரிசன நலத்துறை இயக்குநர் இதன் செயலாளராக நியமிக்கப்பட்டார். இக்குழு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூடும் என்று ஆணையிடப்பட்டது.

அரிசன நலத்துறையை நிருவகித்த அமைச்சரே இக்குழுவின் தலைவராக இருந்து வந்தார். 1951-ஆம் ஆண்டுக்குப் பின் பல முறை குழு மாற்றியமைக்கப்பட்டுத் தொடர்ந்து செயலாற்றி வந்தது. அவ்வாறு அவ்வப்போது கூடி ஏற்ற யோசனைகளை அளித்து வந்ததின் தொடர்பாகப் பல திட்டங்கள் செம்மைப்படுத்தப்பட்டன. பல புதிய திட்டங்களும் உருவாயின. முக்கியமாக கல்லூரிப்படிப்பு உதவித் தொகைகளை விரைந்து மாணவர்களுக்கு அளிக்கும் பொருட்டு மாவட்ட அளவில் மாவட்ட நல அலுவலர்

மூலம் உதவித் தொகை அளிக்க முடிவெடுக்கப்பட்டு, அம் முடிவு, 1960-61-ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து அமுல்படுத்தப் பட்டு வருகிறது.

தனித்துறை அமைப்பு

பிற்பட்டோர் நலனுக்கெனத் தனித்துறை 1969 மே மாதம் புதிதாகத் துவக்கப்பட்டது. பிற்பட்டோரின் நலனை இத்துறை கவனிக்க ஏற்பாடு செய்யப்பட்டு அரிசன நலத்துறையிடம் இருந்து இப்பணிகள் இப் புதுத் துறைக்கு மாற்றப்பட்டன.

1969 ஆகஸ்டு முதல் பிற்பட்டோர் நலனுக்கென தனி அமைச்சர் நியமிக்கப்பட்டார். பிற்பட்டோர் நலத்துறைக் கான அமைச்சர் ஆய்வுக் குழுவின் தலைவராவார்.

பிற்பட்ட வகுப்பினர் துறை புதிதாகத் துவக்கிய பின் கீழ்க் கண்ட இடங்களில் பிற்பட்டோர் நலக் கருத்துரைக் குழு கூடியது:—

நவம்பர் 1969, மதுரை; ஆகஸ்டு 1970, குற்றாலம்; செப்டம்பர் 1971, கோடைக்கானல்; ஏப்ரல் 1972, உதகை; டிசம்பர் 1972 கன்னியாகுமரி; ஜூன் 1973, உதகை.

இப்பொழுது உள்ள குழுவில் அங்கம் வகிப்போர் வருமாறு:—

தலைவர்—

மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்.

அரசு அலுவலர்கள்:

செயலர், சமூகநலத்துறை; துணைச் செயலர், சமூக நலத் துறை; பிற்பட்டோர் நலத் துறை இயக்குநர்—(குழுவின் செய லர்); கல்லூரிக் கல்வி இயக்குநர்; பள்ளிக் கல்வி இயக்குநர்; கூட்டுறவுப் பதிவாளர்; பிராந்திய இயக்குநர், பிற்பட்டோர் நலம், இந்திய அரசு, சென்னை.

உறுப்பினர்கள்:

திரு. எம்.ஆர். ஏழுமலை, திரு. கிருஷ்ணன், திரு. எஸ்.எஸ். தென்னரசு, எம்.எல்.சி., திரு. எம்.சி. பாலன், எம்.பி., திருமதி டி.என். அனந்தநாயகி, எம்.எல்.ஏ.; திரு. ஆண்டியப்பன், திரு. ஏ.எம். மொகிதீன், எம்.எல்.ஏ., திரு. கணபதி, எம்.எல்.ஏ., திரு. எட்மண்ட், எம். எல். ஏ., திரு. மா. பொ. சிவஞானம், எம். எல். சி., துணைத் தலைவர், சட்ட மன்ற மேலவை; திரு .எம். வேதாச்சலம், எம்.எல்.ஏ., திரு. டி. சேதுராஜன், திரு. கே. கந்தசாமி, எம். எல். ஏ., திரு. கே. புருஷோத்தமன், திரு. சி. ஆர். கோலப்பன், எம். எல். சி., திரு. எஸ்.டி. சோமசுந்தரம், எம். பி., திரு. டி. முத்துக்கண்ணு, திரு. எஸ். ஏ. ராஜமாணிக் கம், எம்.எல்.சி.

திரு, கே. போஜன், திரு. டி. பி. சீனுவாசன், எம். எல். ஏ., திருமதி ஜி. பத்மாவதி அம்மாள், எம். எல். ஏ., திரு. கதிரவன், எம்.எல்.ஏ., திரு. ஏ. ஆறுமுகம், எம்.எல்.ஏ., திரு. நல்லதம்பி, திரு. ஏ. ஆர். பெருமாள், எம். எல். ஏ., திரு. டபிள்யூ. பி. பி. சுந்தரம், திரு. மு. மாசிலாமணி, எம். எல். சி., திரு. பிச்சையப்பா, திரு, சி. கோவிந்தராஜன், திரு. கே. டி. கே. தங்கமணி, எம். எல். ஏ., திரு. ஏ. ஆர். மாரிமுத்து. எம். எல். ஏ., திரு. சி. வி. எம். அண்ணாமலை, எம். எல். ஏ., திரு. ஆர். சென்னி செட்டி, திரு. பேச்சண்ண கவுண்டர்.

இக்குழு 24—7—1971-ல் புதுப்பிக்கப்பட்டு 23—7—1974 முடிய இருக்க ஆணையிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு பிற்பட்டோர் நலக்குழு

பின்தங்கிய வகுப்பினர் நலனுக்காக இதுவரை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை மறு ஆய்வு செய்யவும், அவர்கள் நிலைமையை மேம்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் பலனை மதிப்பிடவும், குறிப்பாகக் கல்வித் திட்டங்கள் குறித்தும் அரசுப் பணிகளில் அவர்களின் விதாச்சாரத்தைப் பற்றி மதிப்பிடவும் 1969-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் பின்தங்கிய வகுப்பினர் ஆணைக்குழு ஒன்றை அரசு அமைத்தது. (1) கல்வியில் பிற்பட்ட வகுப்பினர் நிலை, (2) அரசுப் பதவிகளில் அவர்களின் விதாச்சாரம், (3) வர்த்தகம், வாணிகம், தொழில்கள் இவற்றில் அவர்களின் நிலை. (4) கடன் வசதி, வாணிப வசதி, கூட்டுறவு இவற்றில் இவர்களுக்கு உள்ள வாய்ப்பு, (5) வீட்டு வசதி வாய்ப்பு போன்ற இக்கூறுகளில் பின்தங்கிய நிலையை மேம்படுத்துவதற்கு மேற் கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்துப் பரிந்துரைக்கும் படியும் அவ்வாணைக் குழு கேட்டுக் கொள்ளப்பட்டது.

ஆணைக்குழு 1971-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 2-ஆம் நாள் தன் அறிக்கையை அரசிடம் பணிந்தனுப்பியது. கல்வி, வேலை வாய்ப்பு, பொருளாதார நடவடிக்கைகள், சுகாதாரம், வீட்டு வசதி மற்றும் பல்வகை இனங்கள் குறித்து ஆணைக்குழு 110 பரிந்துரைகள் செய்துள்ளது. இவற்றுள் 17 பரிந்துரைகள் ஏற்கப்பட்டன. முக்கிய பரிந்துரைகளின் மேல் அரசு வழங்கிய ஆணைகள் பின்வருமாறு :—

1. கல்வி நிறுவனங்களிலும், பொதுப் பணிகளிலும், பின் தங்கிய வகுப்பினரைச் சேர்த்துக் கொள்ள ஒதுக்கப்பட்டுள்ள இடம் 25 சத வீதத்திலிருந்து 31 சதவீதமாக உயர்த்தி ஆணையிடப்பட்டது.

2. அனைத்து இந்தியப் பணிகளுக்காக நடத்தப்படும் போட்டித் தேர்வுகளுக்கு ஆண்டுதோறும் 50 பின்தங்கிய வகுப்பினரைப் பயிற்றுவிப்பதற்காக 1971-72-ஆம் ஆண்டு சென்னையில் பயிற்சி நிலையமொன்று துவக்க ஆணையிடப்பட்டது.

3. பின்தங்கிய வகுப்பினர் பட்டியலில் மேலும் சுமார் 20 வகுப்பினரைப் புதிதாகச் சேர்த்துக் கொள்ள ஆணை பிறப்பிக்கப்பட்டது.

4. பரிந்துரைக்கிணங்க 133 மாணவரில்லங்கள் திறக்கப்பட்டன.

5. மாணவரில்லங்களில் வழங்கும் உணவுச் செலவிற்கு மாதம் ஒன்றுக்கு மாணவர் ஒவ்வொருவருக்கும் ரூபாய் 8 முதல் 9 வரை தொகை உயர்த்தப்பட்டது.

6. படிப்பு உதவிகளில் உண்டி, உறைவிடச்செலவு மானியத்தை மாதம் ஒன்றுக்கு ரூபாய் 10 முதல் ரூபாய் 20 வரை உயர்த்தியது.

7. அரசுப் பணிகளிலும், கல்லூரிகளிலும் 31 சதவிகித இடங்கள் பிற்பட்டோருக்கு ஒதுக்கப்பட்டுள்ளதா, இல்லையா, என்பதைக் கண்டறிய ஆய்வு நடத்த ஆணையிடப்பட்டது.

8. வருட வருமானம் 2,500-க்கும் ரூபாய் 6,000-க்கும் இடைப்பட்ட பெற்றோரின் பிள்ளைகள் தொழில் கல்வி பயில வருடம் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு ரூபாய் 500 கடன் உதவியளிக்க ஆணையிட்டு 1972-73 முதல் செயல் படுத்தப்படுகின்றது.

9. ஐந்து சதவீத மனைகளைச் சலவையாளர்களுக்கும், மருத்துவர்களுக்கும், ஒதுக்க மாநில வீட்டு வசதி வாரியத்திற்கு உத்திரவிடப்பட்டது.

10. லம்பாடிகளுக்குத் தருமபுரி மாவட்டத்தில் சித்தலிங்க தண்டாவில் உண்டி உறைவிட வசதியுடன் கூடிய பள்ளி ஒன்று திறக்கப்பட்டது.

நிதி மற்றும் சில சங்கடங்கள் காரணமாக சில பரிந்துரைகள் ஏற்கப்படவில்லை. சில பரிந்துரைகள் அரசின் ஆய்வில் உள்ளன.

குற்றப் பரம்பரைப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர் நலன்

குற்றப்பரம்பரை என்ற அவப் பெயருக்கு ஆளாக்கப்பட்டு, பழிச் சொற்களுக்கு ஆளாகி வந்த மக்கள், தன்மானத்தோடு வாழ்ந்து முன்னேறுவதற்கு அரசு பல்வேறு வழிகளிலும் உதவி வருகின்றது. மாநிலத்தில் இந்தப் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் தொகை ஏறக்குறைய 27 இலட்சமாகும். தென் மாவட்டங்களில் இவர்கள் பெருமளவில் வசிக்கின்றனர். சுமார் 70 சாதியினர் இந்த வகையில் உள்ளடங்கியவர்கள். கொடுமையிலிருந்தும், பழியிலிருந்தும் நீக்கப்பட்ட பின்னர், தனி உதவிக்கு இலக்காகும் இவர்கள் ''குற்றப் பரம்பரைப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டவர்கள்'' எனக் குறிப்பிடப்படுகின்றனர். இன்று தனிச் சலுகை இவர்களுக்குத் தேவை என்பதாலேயே தனிமைப் படுத்திக் காட்டப்படுகின்றனர்.

பிற்பட்டோர், தாழ்த்தப்பட்டோர், மலைசாதியினர் ஆகியோரில் ஒரு சில பிரிவினர் வறுமையினாலும் தங்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமையினாலும் கொலை, கொள்ளை, வழிப்பறி முதலிய சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டதாக அன்றைய ஆங்கில ஆட்சியினர் கருதி, அதற்கென அன்று குற்றப் பரம்பரைச் சட்டமியற்றி அதன் மூலம் இவர்களைத் திருத்துவதற்கு முயற்சித்தனர். அதன்படி அம்மக்கள் காவலர் கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டனர். கல்வி அறிவு இன்மையைப் போக்க பள்ளிகள் ஏற்படுத்தப் பட்டன. படிப்புக்குரிய பதவிகளும் அளிக்கப்பட்டன. தேயிலை, ரப்பர் தோட்டங்களில் வேலை வாய்ப்புகள் அளிக்கப்பட்டன. கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டு அவற்றின் மூலம் மாடுகள் வாங்க, மற்றும் விவசாயக் கருவிகள் வாங்க கடன் உதவிகள் அளிக்கப்பட்டன.

அன்றைய பள்ளிகள்

முதன் முதலில் 1922-ல் மதுரையிலும், 1923-ல் முகவையிலும் இத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. ஆரம்பிக்கப்பட்ட பள்ளிகள் அன்று இருந்த ஆங்கிலேய அரசால், கிறித்தவ பாதிரியார்களிடம் ஒப்படைக்கப்பட்டன. அவைகள் சிறுகச் சிறுக தாலூகா போர்டுக்கும், ஜில்லா போர்டுக்கும் மாற்றப்பட்டன. எஞ்சியுள்ளவையே இன்று மதுரையிலும், முகவையிலும் உள்ள பள்ளிகள். முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் முகவையில் 5 பள்ளிகளும், நெல்லையில் 10 பள்ளிகளும் திறக்கப்பட்டன. இதே போல், வட ஆர்க்காட்டில் 4 பள்ளிகளும், கோவையில் இரண்டு பள்ளிகளும், சேலத்தில் 3 பள்ளிகளும் திறந்து நடத்தப்பட்டன.

இவ்வகையில் மதுரை மாவட்டத்தில் 9 உயர்நிலைப் பள்ளிகள் உள்பட மாநிலத்தில் மொத்தம் 10 உயர்நிலைப் பள்ளிகள், 32 உயர் துவக்கப் பள்ளிகள், 235 துவக்கப்பள்ளிகள் உள்ளன.

தங்கிப் பயிலும் பள்ளி ஒன்று தருமபுரி மாவட்டம் சிட்டிலிங்கிதண்டாவில் 50 தொடக்க வகுப்பு மாணவர்களுக்கு நடத்தப்படுகிறது.

உணவு உடை

ஏழை மாணவர்கள் தங்கள் பெற்றோரின் வறுமை காரணமாகப்
படிப்பை நிறுத்திவிடாமல் இருக்க 1 முதல் 8 வகுப்புவரை உள்ள,
இத்துறை நடத்தும் பள்ளிகளில் சாதி வித்தியாசம் இன்றி
பகலுணவு இலவசமாக வழங்கப்படுகிறது. ஒவ்வொரு நாளுக்கும்
மாணவர் ஒருவருக்கு 15 காசு செலவிடப்படுகிறது. இது தவிர,
நெல்லை, முகவை மாவட்டங்களில் மட்டும், குற்றப்பரம்பரைச்
சட்டத்திலிருந்து நீக்கப்பட்ட மாணவர்கள் பெருவாரியாக உள்ள
தனியார் பள்ளிகளிலும் இவ்வுணவு வழங்கப்படுகிறது.

எல்லா உயர்நிலைப் பள்ளி மாணவ மாணவியர் இல்லங்களிலும்
வருடத்திற்கு இருமுறை சீருடைகள் வழங்கப்படுகின்றன. பள்ளி
களில் மதுரை மாவட்டம் தவிர ஏனைய மாவட்டப் பள்ளிகளில்
சீருடை ஆண்டுக்கு இருமுறை வழங்கப்படுகிறது. மதுரையில்
உள்ள கள்ளர் பள்ளிகளில் மட்டும் 1 முதல் 3 வகுப்பு வரை
பயிலும் மாணவர்களுக்கு வருடத்திற்கு இரு முறை சீருடை
வழங்கப்படுகிறது.

தொழிற்பயிற்சி வசதி

நீக்கப்பட்டோருக்கு தொழில்
குற்றப் பட்டியலிலிருந்து பயன்தரக்கூடிய
நுட்பப் பயிற்சி அளித்து அதன் வாயிலாக வாழ்வில்
தொழில்களை தனிப்பட்ட முறையில் அவர்கள் நடத்தி தொடங்
வளம்பெற வகை செய்வதற்காகத் தொழில் திட்டங்கள் பொது
கப்பட்டன. இரண்டாம் திட்டக் காலத்திலிருந்து மூன்று நடத்தப்
நோக்கு பொறியியல் பணி மனைகள் அமைக்கப்பட்டு ஒன்றும்
பட்டு வருகின்றன. முகவை மாவட்டம் முதுகுளத்தூரில் திருநெல்வேலி
மதுரை மாவட்டம் செக்கானூரணியில் ஒன்றும் அமைக்கப்பட்
மாவட்டம் வீரகேரளம் புதூரில் ஒன்றுமாக இவை முதலிய
டுள்ளன. கருமான் வேலை, உலோகத் தகடு வேலைகள் மாதங்
வற்றில் பயிற்சி தரப்படுகிறது. பயிற்சிக் காலம் 18 வருமாறு:
களாகும். இதுவரை பயிற்சி பெற்றவர்கள் விவரம்

பயிற்சி பெற்ஞேர் 1963-64-ல் 15 பேர்கள். 1965-66-ல் 24 பேர்கள். 1966-67-ல் 48 பேர்கள். 1968-69-ல் 51 பேர்கள். 1969-70-ல் 47 பேர்கள். 1970-71-ல் 93 பேர்கள். 1971-72-ல் 163 பேர்கள். 1972-73-ல் 213 பேர்கள்.

கருவிகள்

தொழிற் கூடங்களில் பயிற்சி பெற்று, பொருளாதார வசதிக் குறைவிஞல் தாஞகத் தொழில்நடத்த முடியாதவர்களுக்கு இலவசத் தொழிற் கருவிகள் அளிக்கும் திட்டத்திற்காக 1972-73 முதல் நிதி ஒதுக்கப்படுகிறது. கடந்த ஆண்டில் இதற்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 0.25 இலட்சம். இதஞல் 26 நபர்கள் கருமார் தொழில், பிட்டர் தொழில் போன்ற தொழில்களுக்கான கருவிகளை இலவசமாகப் பெற தேர்ந்தெடுக்கப்பட்டனர். நடப்பு ஆண்டிற்கும் இதே அளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

இவை தவிர சென்னை பிரிஸ்லி நகர் குடியிருப்பில் பிரம்பு நாற்காலி பயிற்சி நிலையம் ஒன்றும், நெல்லை மாவட்டத்தில் களக்காட்டில் பிரம்பு அறைக் கலன்கள் பயிற்சி நிலையமும் மாநில வணிகத் தொழில் இயக்குநரால் பேணப்பட்டு வருகின்றன.

மகளிர் நல இயக்குநரால் நெல்லை மாவட்டம் பெருங்குளத்தில் தையல் ரெடிமேட் ஆடைகள் தயாரிப்புப் பயிற்சிநிலையமும், தருமபுரி மாவட்டம் சாமியா புரத்தில் மூங்கில் வேலை நிலையமும், மதுரை மாவட்டம் உசிலம்பட்டியில் தையல் தொழில் நிலையமும் நடத்தப்படுகின்றன. இதற்கென 1973-74-ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 2.84 இலட்சம் ஒதுக்கப்பட்டுளளது.

இதைத் தவிர கன்னியாகுமரி மாவட்டம், பாக்கோட்டில் கயிறு மற்றும் தும்புப் பொருள் பயிற்சி நிலையம் செயல்பட்டு வருகிறது. மார்த்தாண்டத்தைச் சுற்றியுள்ள பின்தங்கிய வகுப்புப் பெண்களைப் பயிற்றுவிக்க பாக்கோட்டில் உள்ள தும்பு பொருள் பயிற்சி நிலையம் மார்த்தாண்டத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. இதற்கென 1972-73-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 0.28 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதே அளவு ஒதுக்கீடு 1973-74-ஆம் ஆண்டுக்கும் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையங்களிஞல் 40 பேர் பயனடைகின்றனர்.

சிறிது நிலம் படைத்த தாழ்த்தப்பட்ட விவசாயிகளுக்கு அவர்கள் விவசாயத்தைச் செவ்வனே நடத்த அரசு உதவி வருகிறது. குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பு மக்கள் தாழ்த்தப்பட்டவர்களை விட எந்த விதத்திலும் வாழ்க்கைத் தரத்தில் உயர்ந்தவர்கள் அல்லர். இந்த உணர்வுடனேயே, தாழ்த்தப்பட்டவர்களுக்கு அளிக்கப்படும் முக்கிய சலுகைகளை அவர்களுக்கும் மாநில அரசு அளித்து வருகிறது.

விவசாயிகள் சிலருக்கு அரசே சாகுபடிக்கு நிலங்களை ஒப்படை செய்துள்ளது. இவ்வாறு ஒப்படை பெற்ற நிலவுடைமைதாரர் களும் மற்றும் சொந்தமாக சாகுபடி செய்து வருகிற மேற்படி பிரிவினைச் சேர்ந்த இதர மக்களும், தங்கள் விவசாய முன்னேற்றத் திற்கு உழவு மாடுகள் வாங்கவும் பாசனக் கிணறு வெட்டவும் முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலிருந்து உதவி பெற்றனர். இதுவரை இந்தத் திட்டத்தின்கீழ் 12,013 பேர் உழவு மாடுகளும் 1,498 குடும்பத்தினர் கிணறு வெட்ட மானியமும் பெற்றுள்ளனர். இப்போதுள்ள நடைமுறைப்படி ஒரு சோடி உழவு மாடுகள் வாங்க நபருக்கு ரூ. 500 ம் பாசனக் கிணறு வெட்ட கிணறு ஒன் றுக்கு ரூ. 2,000 வரையிலும் மானியமாக நிதி உதவி அளிக்கப் படுகிறது.

வீடு கட்ட உதவி

குற்றப்பரம்பரைப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட மக்கள் மறு வாழ்வுத் திட்டத்தின் ஒரு அங்கமாக அவர்களுக்கு அரசு வீடுகள் கட்டித் தருகிறது. இப் பணி முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலம் முதல் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வந்துள்ளது. இந்தத் திட்டத்தின்கீழ் 6,222 வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் இறுதியாண்டாகிய 1973-74-ம் ஆண்டில் இவ்வகை வீட்டு வசதிக்கு ரூ. 2.70 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் மேலும் 300 வீடுகள் இவ்வாண்டு கட்டி முடிக்கப் படும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது. இருந்தாலும் ஒரு வீடு கட்ட, 900 மானியமாகவும் ரூ. 300 கடனாகவும் ஆக ரூ. 1,200 மட்டுமே வழங்கப்படுவதால் இந்தத் தொகைக்குள் ஒரு வீடு கட்ட முடியுமா என்ற ஐயப்பாடு சில இடங்களில் ஏற்பட்டுள்ளது. இத் தொகையை ரூ. 2,500ஆக உயர்த்த வேண்டும் என்று முறையிடப் பட்டுள்ளது.

மத்திய அரசு உதவி

குற்றப்பரம்பரைச் சட்டத்திலிருந்து நீக்கப்பட்டோரின் நல னுக்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கு ஐந்தாண்டுத் திட்டத் தில் மத்திய அரசு வழங்கும் மானியம் ரூ. 18.50 இலட்சமாகும். 1973-74-க்கும் இதே அளவில்தான் வழங்கும். தேவைக்கேற்ப இவ்வுதவி இல்லாததனால் அதாவது திட்டமிட்ட தொகைக்கு உதவியளிக்காததால் ஆண்டின் மத்தியில் சில திட்டங்களைக்

கைவிட நேரிடுகிறது. செலவழிக்கப்பட்ட தொகையும், மத்திய அரசு வழங்கிய மானியமும் வருமாறு :—

ஆண்டு	மாநில அரசு திட்டமிட்ட தொகை	மத்திய அரசு வழங்கிய தொகை	மாநில அரசு செலவழித்த தொகை
(1)	(2)	(3)	(4)
		(ரூபாய் இலட்சத்தில்.)	
1969-70	18.36	16.0)	17.83
1970-71	21.91	18.50	24.08
1971-72	53.19	18.50	45.07
1972-73	58.14	18.50	53.02
1973-74 (மதிப்பீடு).	72.69	18.50	..

இவ்வகை மக்களின் நல்வாழ்வுக்காக மக்கள் தொகை அடிப்படையில் இந்தியா முழுவதிற்கும் இந்திய அரசு நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 450 இலட்சம் ஒதுக்கியது. இம்மக்களின் மக்கள் தொகை 40 இலட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த அடிப்படையில் தமிழ் நாட்டில் சுமார் 13 இலட்ச மக்களுக்கு நியாயமாக நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் வழங்க வேண்டிய மானியத் தொகை ரூ. 150 இலட்சமாகும். ஆனால் ஒதுக்கியுள்ள தொகை ரூ. 90 இலட்சமே. இருப்பினும் நமக்குரிய பங்கைப் பெற இவ்வரசு தொடர்ந்து முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றது.

''பிற்பட்ட வகுப்பு மக்கள் நலனுக்கு அரசு தீட்டித் தரும் திட்டங்கள் 'தேர்' ஆக இருக்கலாம். ஆனால் அவற்றை நிறைவேற்றும் தேரோட்டிகள் அரசு அலுவலர்கள். எனவே அரசு அலுவலர்கள் அரசின் நற்றொண்டுஆற்றும் கரங்களாக இருத்தல் வேண்டும்'' என்று பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர் மாண்புமிகு ...ன். வி. நடராசன் அவர்கள் உதகையில் நடந்த மாவட்ட நல அலுவலர்கள் மாநாட்டில் குறிப்பிட்டார். நல்வாழ்வுக்கான தேர் சமத்துவம், சமநீதி, வீதிகளில் வலம் வருகின்றது. நாமும் வடம் பிடிப்போம், வளம் காண்போம்!

பிற்பட்டோர் நலத் துறை திட்டச் செலவுகள்

(ரூபாய் இலட்சத்தில்.)

	1969—70	1970—71	1971—72	1972—73	1973—74 மதிப்பீடு.
அஜீஸ் நகர் செட்டில்மெண்ட் ..	1.77	1.82	1.72	1.83	1.87
குற்றப் பரம்பரைச் சட்டத்திலிருந்து நீக்கப்பட்டோர் நலம் ..	57.44	59.49	62.17	62.65	67.08
பிற்பட்டோர் நலன் ..	94.26	96.95	98.18	96.06	99.68
குறைந்த வருமான மாணவர் படிப்பு உதவி ..	14.76	14.88	2.78	1.50	4.00

நான்காவது ஐந்தாண்டுத் திட்டம்.—

	1969—70	1970—71	1971—72	1972—73	1973—74 மதிப்பீடு.
பிற்பட்டோர் நலம் ..	76.65	118.98	219.04	266.91	307.30
குற்றப் பரம்பரைச் சட்டத்திலிருந்து நீக்கப்பட்டோர் ..	17.53	22.32	43.83	49.61	66.96
மாணவ இல்லங்களுக்குக் கூடுதலாகத் தரப்படும் தொகை ..	0.13	1.76	1.24	3.41	5.72

உணவு இல்லங்கள்

தமிழ்நாட்டில் 1973–74-ல் பிற்பட்ட மாணவர் உணவு இல்லங்கள் உள்ள இடங்கள் விவரம் கீழே தரப்படுகிறது. அடைப்புக் குறிக்குள் உள்ள எண்கள், அங்குள்ள மாணவர்களின் எண்ணிக்கையைக் குறிக்கும்.

சென்னை மாவட்டம்

அரசினர் மாணவியர் இல்லம், அடையாறு (150); அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், தென்சென்னை (150); அரசினர் கல்லூரி மாணவர் இல்லம் வடசென்னை (100); அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், சென்னை (50); அரசினர் தொழில் நுட்பக் கல்லூரி மாணவர் இல்லம், சென்னை (55); அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், தியாகராயநகர், சென்னை (100).

திருநெல்வேலி

அரசினர் மாணவியர் இல்லம், புதூர் (75); அரசினர் மீனவ மாணவர் இல்லம், தூத்துக்குடி (150); அரசினர் மாணவர் இல்லம், எருவாடி (30); அரசினர் மாணவர் இல்லம், பணிக்க நாடார் குடியிருப்பு (50); அரசினர் மாணவர் இல்லம் சுவாமி நாதபுரம் (49); அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், திருநெல் வேலி (50); அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், தூத்துக்குடி (50); அரசினர் மாணவர் இல்லம், மேலப்பாளையம் (50).

தஞ்சாவூர்

அரசினர் மாணவர் இல்லம், மகாதேவப்பட்டினம் (50); அரசினர் மாணவர் இல்லம்,பேராவூரணி (50); அரசினர் மாணவியர் இல்லம், அறந்தாங்கி (40); அரசினர் மாணவர் இல்லம், மன்னார்குடி (100); அரசினர் மாணவியர் இல்லம், வலங்கிமான் (50); அரசினர் மாணவர் இல்லம், நீடாமங்கலம் (75); அரசினர் மாணவர் இல்லம், உம்பளாச்சேரி (30); அரசினர் மாணவர் இல்லம், வேதாரண்யம் (50); அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், தஞ்சாவூர் டவுன் (175); அரசினர் மாணவர் இல்லம், ஆலத்தூர் (40); அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், குடந்தை

(50); அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், திருவாரூர் (50); அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், மாயவரம் (50); அரசினர் மாணவர் இல்லம், கண்ணுத்தான்குடி (50).

தென்னார்க்காடு

அரசினர் மாணவர் இல்லம், விருத்தாசலம், (100); அரசினர் மாணவர் இல்லம், பெண்ணாடம் (90); அரசினர் மாணவர் இல்லம், பெரியகுப்பம் (70); அரசினர் மாணவர் இல்லம், செத்தியாத்தோப்பு (140); அரசினர் மாணவர் இல்லம், சிறுபாக்கம் (75); அரசினர் மாணவர் இல்லம், திருநாவலூர் (50); அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், கடலூர் (75); அரசினர் மாணவர் இல்லம், கம்மாபுரம் (50); அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், கடலூர் (50); அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், திண்டிவனம் (50); அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், விருத்தாசலம் (150); அரசினர் மாணவர் இல்லம், தேவபாண்டாளம் (50); அரசினர் மாணவர் இல்லம், சோமாந்தர்குடி (50).

மதுரை

அரசினர் மாணவர் இல்லம், அலங்காநல்லூர் (104); அரசினர் மாணவர் இல்லம், திருநகர் (80); அரசினர் மாணவர் இல்லம், தல்லாகுளம் (110); அரசினர் மாணவர் இல்லம், தர்மபுரி (பெரியகுளம் தாலூகா) (40); அரசினர் மாணவர் இல்லம், பெரியகுளம் (80); அரசினர் மாணவர் இல்லம், செக்காபட்டி (75); அரசினர் மாணவர் இல்லம், சின்னாளப்பட்டி (80); அரசினர் மாணவர் இல்லம், மேலவளவு (50); அரசினர் மாணவர் இல்லம், போடிநாயக்கனூர் (120); அரசினர் மாணவர் இல்லம், வாடிப்பட்டி (80); அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், மதுரை (50); அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், திண்டுக்கல் (50); அரசினர் மாணவர் இல்லம், அச்சம்பட்டி (50); அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், மேலூர் (100).

தர்மபுரி

அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், தர்மபுரி (210); அரசினர் மாணவியர் இல்லம், பாப்பாரப்பட்டி (50); அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், கிருஷ்ணகிரி (50); அரசினர் மாணவர் இல்லம், வேலப்பட்டை (50); அரசினர் மாணவர் இல்லம், ஹொசூர் (50); அரசினர் மாணவர் இல்லம், பாலக்கோடு (60); அரசினர் மாணவர் இல்லம், ஐக்கசமுத்திரம் (50); அரசினர் மாணவர் இல்லம், ஹரூர் (50); அரசினர் மாணவர் இல்லம், அஞ்சட்டி (50); அரசினர் மாணவர் இல்லம், பெண்ணகரம் (50).

இராமநாதபுரம்

அரசினர் மாணவர் இல்லம், பாகநேரி (30); அரசினர் மாணவர் இல்லம், கண்டரமாணிக்கம் (30); அரசினர் மாணவர் இல்லம், வடக்கு சமுத்திரம் (50); அரசினர் மாணவியர் இல்லம், நாட்டரசன்கோட்டை (30); அரசினர் மாணவர் இல்லம், திருக்கோஷ்டியூர் (50); அரசினர் மாணவர் இல்லம், காரியாபட்டி (30); அரசினர் மாணவர் இல்லம், புதுவயல் (50); அரசினர் மாணவர் இல்லம், திருத்தாங்கல் (60); அரசினர் மாணவர் இல்லம், மண்டலமாணிக்கம் (30); அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், விருதுநகர் (50); அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், இராமநாதபுரம் (100); அரசினர் மாணவியர் இல்லம், தேவகோட்டை (50); அரசினர் மாணவர் இல்லம், கூமாபட்டி (50); அரசினர் மாணவர் இல்லம், பரமக்குடி (50); அரசினர் மாணவர் இல்லம், பெரியகோட்டை (50).

கோயம்புத்தூர்

அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், கோயம்புத்தூர் (100); அரசினர் மாணவர் இல்லம், பெருந்துறை (50); அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், ஈரோடு (50); அரசினர் மாணவர் இல்லம், சத்தியமங்கலம் (60); அரசினர் மாணவர் இல்லம், புஞ்சைப்புளியம்பட்டி (60); அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், திருப்பூர் (100); அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், கோபிசெட்டிபாளையம், (100); அரசினர் மாணவர் இல்லம், தொண்டாமுத்தூர் (50).

வட ஆர்க்காடு

அரசினர் மாணவர் இல்லம், பொன்னை (50); அரசினர் மாணவர் இல்லம், திருவண்ணாமலை (50); அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், குடியாத்தம் (50); அரசினர் கல்லூரி மாணவர் இல்லம். திருப்பத்தூர் (50); அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், செய்யார் (30); அரசினர் மாணவர் இல்லம், குடியாத்தம் (50); அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், வேலூர் (50); அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், வாணியம் பாடி (50); அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், வாலாஜா பேட்டை (50).

நீலகிரி

அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், உதகமண்டலம் (50); அரசினர் மாணவர் இல்லம், கூனூர் (30);

சேலம்

அரசினர் மாணவர் இல்லம், இளம்பிள்ளை (80) ; அரசினர் மாணவர் இல்லம், கொங்கணாபுரம் (50) ; அரசினர் மாணவர் இல்லம், மகுடஞ்சாவடி (50) ; அரசினர் மாணவர் இல்லம், கண்ணன்குறிச்சி (50) ; அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், சேலம் சந்திப்பு (100) ; அரசினர் மாணவர் இல்லம், தாரமங்கலம் (50) ; அரசினர் மாணவர் இல்லம், இடப்பாடி (50) ; அரசினர் மாணவர் இல்லம், எருமைப்பட்டி (50) ; அரசினர் மாணவர் இல்லம், தீவட்டிப்பட்டி (50) ; அரசினர் கல்லூரி மாணவியர் இல்லம், நாமக்கல் (50) ; அரசினர் மாணவர் இல்லம், எலச்சிபாளையம் (50) ; அரசினர் மாணவர் இல்லம், வாழப்பாடி (50) ; அரசினர் மாணவர் இல்லம், மல்லசமுத்திரம் (50).

திருச்சிராப்பள்ளி

அரசினர் மாணவியர் இல்லம், மேட்டுப்பாளையம் (30) ; அரசினர் மாணவர் இல்லம், கல்லக்குடி (50) ; அரசினர் மாணவர் இல்லம், விராலிமலை (75) ; அரசினர் மாணவர் இல்லம், திருவெரம்பூர் (100) ; அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், திருச்சி டவுன் (100) ; அரசினர் மாணவர் இல்லம், ஜெயங்கொண்டான் (50) ; அரசினர் மாணவர் இல்லம், பெரம்பலூர் (50) ; அரசினர் மாணவர் இல்லம், லாலாபேட்டை (75) ; அரசினர் மாணவர் இல்லம், திருமயம் (50) ; அரசினர் மாணவர் இல்லம், பஞ்சப்பட்டி (50) ; அரசினர் மாணவர் இல்லம், கண்ணனூர் (50) ; அரசினர் மாணவர் இல்லம், துங்காபுரம், (50) ; அரசினர் மாணவர் இல்லம், அரியலூர் (75) ; அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், புதுக்கோட்டை (175) ; அரசினர் மாணவர் இல்லம், மருவத்தூர் (100) ; அரசினர் மாணவர் இல்லம், மணப்பாறை (60) ; அரசினர் மாணவர் இல்லம், பொன்பரப்பி (50) ; அரசினர் கல்லூரி மாணவர் இல்லம்,—2, திருச்சி (200).

செங்கற்பட்டு

அரசினர் மாணவர் இல்லம், வெங்கனூர் (50) ; அரசினர் மாணவர் இல்லம், கனகம்மாசத்திரம் (50) ; அரசினர் மாணவர் இல்லம், மதுரமங்கலம் (25) ; அரசினர் மாணவர் இல்லம், சாலவாக்கம் (25) ; அரசினர் மாணவர் இல்லம், பெரியபாளையம் (50) ; அரசினர் மாணவர் இல்லம், கருங்குழி (30) ; அரசினர் மாணவர் இல்லம், அத்திமாஞ்சேரிபேட்டை (50) ; அரசினர் கல்லூரி கல்லூரி மாணவர் இல்லம், செங்கற்பட்டு (50) ; அரசினர் கல்லூரி மாணவர் மாணவர் இல்லம், திருத்தணி (50) ; அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், காஞ்சிபுரம் (100) ; அரசினர் மாணவர் இல்லம், பாதிரிவேடு (50).

கன்னியாகுமரி

அரசினர் கல்லூரி மாணவியர் இல்லம், நாகர்கோவில் (50) ; அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், நாகர்கோவில் (50) ; அரசினர் கல்லூரி மாணவியர் இல்லம், குழித்துறை (100).

இல்லங்கள் வகை.	இல்லங்களின் எண்ணிக்கை.	பயன் பெறுவோர்
உயர்நிலைப்பள்ளி ஆண்கள் இல்லம்.	91	5,313
உயர்நிலைப்பள்ளி பெண்கள் இல்லம்.	10	565
கல்லூரி மாணவர்கள் இல்லம் ..	36	3,070
கல்லூரி மாணவியர் இல்லம் ..	7	400
	144	9,348

குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர் உணவு இல்லங்கள்

மதுரை மாவட்டம்

அரசினர் மாணவர் இல்லம், திருமங்கலம் (150) ; அரசினர் மாணவர் இல்லம், திண்டுக்கல் (180) ; அரசினர் மாணவியர் இல்லம், உசிலம்பட்டி (650) ; அரசினர் மாணவர் இல்லம், மதுரை (60) ; அரசினர் மாணவர் இல்லம், செக்காணூரணி (200) ; அரசினர் மாணவியர் இல்லம், திருமங்கலம் (225) ; அரசினர் மாணவியர் இல்லம், சின்னமனூர் (100) ; அரசினர் மாணவர் இல்லம், நாட்டாமங்கலம் (120) ; அரசினர் தொழிற் பயிற்சி இல்லம், கே.புதூர் (100) ; அரசினர் மாணவர் இல்லம், உத்தமபாளையம் (150) ; அரசினர் மாணவர் இல்லம், வத்தலக் குண்டு (140) ; அரசினர் மாணவியர் இல்லம், கம்பம் (50) ; அரசினர் மாணவர் இல்லம், வத்தலகுண்டு (140) ; அரசினர் மாணவர் இல்லம், கடமலைக்குண்டு (60) ; அரசினர் மாணவர் இல்லம், பாப்பாப்பட்டி (80) ; அரசினர் மாணவர் இல்லம், விளாத்தூர் (45) ; அரசினர் மாணவர் இல்லம், ராஜதானி (70); அரசினர் மாணவியர் இல்லம், செக்காணூரணி (50) ; அரசினர் மாணவர் இல்லம், அல்லிநகரம் (60) ; அரசினர் மாணவர் இல்லம், மேலக்கால் (50) ; அரசினர் மாணவர் இல்லம், விளாம்

பட்டி (50) ; அரசினர் மாணவர் இல்லம், போடி (50) ; அரசினர் மாணவியர் இல்லம், கூடலூர் (50) ; அரசினர் மாணவர் இல்லம், தும்மக்குண்டு (50) ;

திருநெல்வேலி

அரசினர் மாணவர் இல்லம், கயத்தாறு (50) ; அரசினர் மாணவர் இல்லம், கோயில்பட்டி (60) ; அரசினர் மாணவர் இல்லம், சங்கரன்கோயில் (110) ; அரசினர் மாணவர் இல்லம், நாங்குநேரி (90) ; அரசினர் மாணவர் இல்லம், ஸ்ரீவைகுண்டம் (60) ; அரசினர் மாணவர் இல்லம் அம்பாசமுத்திரம் (75) ; அரசினர் மாணவர் இல்லம், தென்காசி (60) ; அரசினர் மாணவர் இல்லம், பாளையங்கோட்டை (75) ; அரசினர் மாணவர் இல்லம். வீரகேரளம்புதூர் (30) ; அரசினர் மாணவர் இல்லம், வெள்ளாங்குளம் (30) ; அரசினர் மாணவர் இல்லம், வன்னிகோநேந்தில் (30) ; அரசினர் மாணவர் இல்லம், சாயமலை (30); அரசினர் மாணவர் இல்லம் வாசுதேவநல்லூர் (50).

செங்கற்பட்டு

அரசினர் மாணவியர் இல்லம் , பல்லாவரம் (50).

இராமநாதபுரம்

அரசினர் மாணவியர் இல்லம், அருப்புக்கோட்டை (50) : அரசினர் மாணவர் இல்லம், கமுதி (150); அரசினர் மாணவர் இல்லம், அருப்புக்கோட்டை (100) அரசினர் மாணவர் இல்லம், முதுகளத்தூர் (100) ; அரசினர் மாணவர் இல்லம், நயினார் கோவில் (75); அரசினர் மாணவர் இல்லம் பொம்மனேந்தல் (50); அரசினர் மாணவர் இல்லம், மேலகிடாரம் (50); அரசினர் மாணவர் இல்லம், கடலாடி (60).

திருச்சிராப்பள்ளி

அரசினர் மாணவர் இல்லம், புதுக்கோட்டை (44) ; அரசினர் மாணவர் இல்லம், திருச்சிராப்பள்ளி (50) ; அரசினர் மாணவியர் இல்லம், திருச்சிராப்பள்ளி (30) ; அரசினர் மாணவியர் இல்லம், பொன்னமராவதி (50) ; அரசினர் மாணவர் இல்லம், மேலமாயனூர் (50).

கோயம்புத்தூர்

அரசினர் மாணவர் இல்லம், அவிநாசி (50) ; அரசினர் மாணவர் இல்லம், திருப்பூர் (50).

தஞ்சாவூர்

அரசினர் மாணவர் இல்லம், கந்தர்வகோட்டை (50).

இல்லங்கள் வகை.	இல்லங்கள் எண்ணிக்கை.	பயன் பெறுவோர்
பெண்கள் உயர்நிலைப் பள்ளி இல்லங்கள்.	10	1,205
ஆண்கள் உயர்நிலைப்பள்ளி இல்லங்கள்.	44	3,894
	54	5,099

பிற்பட்டோர் நலனுக்கான கைத்தொழில் நிலையங்கள்.

(1)	துவக்கிய வருடம். (2)	பயிற்சி பெறுவோர் (3)	உதவித் தொகை ரூபாய். (4)
தொழில், வணிகத் துறையினரால் நடத்தப்படுபவை			
1. பொது பொறியியல் பட்டறை, செக்காணூரணி (மதுரை மாவட்டம்)	1963	15	45
2. பொது பொறியியல் பட்டறை, வீரகேரளம்புதூர் (திருநெல்வேலி மாவட்டம்) ..	1965	15	45
3. பொது பொறியியல் பட்டறை, முதுகுளத்தூர் (இராமநாதபுரம் மாவட்டம்) ..	1961	30	45
4. பிரம்பு பொருள்கள் செய்யும் பயிற்சிப் பள்ளி (பிரிசிலி நகர் சென்னை மாவட்டம்)	1971	20	30

மகளிர் நலத் துறையினரால் நடத்தப்படுபவை			
1. தையல் பயிற்சி மற்றும் உடை தயாரிக்கும் தொழிற் பயிற்சி நிலையம், பெருங்குளம் (திருநெல்வேலி மாவட்டம்) ..	1970	20	25
2. மூங்கில் பொருட்கள் செய்யும் நிலையம், சாமியாபுரம் (தர்மபுரி மாவட்டம்) ..	1970	15	30
3. தையல் மற்றும் பூ வேலை தொழிற்பயிற்சி நிலையம், உசிலம்பட்டி (மதுரை மாவட்டம்)	1971	50	30
பிற்பட்டோர் நலத்துறையினரால் நடத்தப்படுபவை.			
1. தும்புப் பொருள் தயாரிப்புப் பயிற்சி நிலையம், மார்த்தாண்டம் (கன்னியாகுமரி மாவட்டம்) ..	1960	25	30
2. பிரம்புப் பொருள் தயாரிப்புப் பயிற்சி நிலையம், பாக்கோடு (கன்னியாகுமரி மாவட்டம்.)	1960	15	30

இணைப்பு

பிற்பட்டோர் நல மேம்பாடு அரசாணைகள்

லப்பை, பிரிவினர் அவர்கள் எம்மொழி பேசுபவர்களாயினும் சரி, அவர்களையும் தக்காணிய முஸ்லீம் வகுப்பினரையும், கல்வி முதலியவற்றில் அவர்களுடைய பின்னடைந்த நிலையைக்கருதி, பின் தங்கிய வகுப்பினரென அரசு அறிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது. இதனால் பயனடைவோர் 6 இலட்சம் லப்பைகளும், 8 இலட்சம் தக்காணிய முஸ்லீம்களும் ஆவார். இந்த இரண்டுவகுப்பினருடன் கீழ்க்காணும் 4 வகுப்பினரும் பின்தங்கிய வகுப்பினர் பட்டியலில் சேர்க்கப்பட்டனர்.

1. வல்லம்பர்
2. சாலிவாகனா
3. யவனா
4. பன்னிரண்டாம் செட்டியார் அல்லது உத்தம செட்டியார்

இச் சலுகையினால் மேற்கூறிய வகுப்புகளைச் சேர்ந்த சுமார் 20,000 பேர்கள் பயன்பெறுவர். இதன் விவரம் 25-7-1973 தேதியிட்ட சமூகநலத்துறை அரசாணை எண் 652-ல் காணலாம்.

தாழ்த்தப்பட்ட வகுப்பினர், பிற்பட்ட வகுப்பினர் நலன் தொடர்பாக மதம் மாறியவர்களுக்கு என்னென்ன வகைகளில் சலுகைககள் உள்ளன என்பது 3-1-1974 தேதியிட்ட சமூகநலத் துறை அரசாணை எண் 9-ல் விளக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு பிற்பட்டோர் நல ஆணைக்குழு தயாரித்த, பிற்பட்ட வகுப்பினர் திருத்தப்பட்ட பட்டியலுக்குத் தமிழ்நாடு அரசு ஒப்புதல் அளித்தது. 1972 மே 15 தேதியிட்ட அரசாணை 437-ல் இதன் விவரம் தரப்பட்டுள்ளது.

ஆசிரியர் பயிற்சி பெறும் பிற்பட்ட, மிகப்பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு உணவு உறைவிட உபகாரச் சம்பளம் மாதம் ரூ. 40 வீதம் 10 மாதங்களுக்கு வழங்க 18-7-1971 தேதியிட்ட சமூக நலத்துறை அரசாணை எண்: 835-ல் உத்திரவிடப்பட்டுள்ளது.

தகுதி அடிப்படை

பிற்பட்ட வகுப்பினர், தாழ்த்தப்பட்ட வகுப்பினர் ஆகியோருக்கு அரசுப் பணிகளிலும், கல்வி நிறுவனங்களிலும் ஒதுக்கீட்டை உயர்த்த வேண்டும் என்ற பிற்பட்டோர் நலக்குழுவின் பரிந்துரையை ஏற்று 1971 ஜூன் 7-ந் தேதி சமூகநலத்துறை அரசாணை எண் : 695-ல் அரசாங்கம் உத்தரவு பிறப்பித்துள்ளது. இதன்படி பிற்பட்டோருக்கு ஒதுக்கீடு 25-லிருந்து 31 சதவிகிதமாகவும், தாழ்த்தப்பட்டோருக்கு ஒதுக்கீடு 16-லிருந்து 18 சதவிகிதமாகவும் உயர்ந்துள்ளது. தகுதி அடிப்படையில் நிரப்பப்படும் 51 சதவிகித இடங்களுக்கும் பிற்பட்டோரும் தாழ்த்தப்பட்டோரும் தகுதி அடிப்படையில் போட்டியிடலாம்.

பி.எஸ்ஸி. (விவசாயம்) பட்டப்படிப்பு படிக்கின்ற பிற்பட்ட, மிகப் பிற்பட்ட, பழங்குடியைச் சேர்ந்த மாணவர்களுக்கு உணவு, உறைவிட உபகாரச் சம்பளங்கள் வழங்குவதில் அந்தந்த மாணவர்கள் சம்பந்தமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்த ஐந்து மைல் தூரத்துக்கு அப்பாலிருந்து வருபவர்களாக இருக்க வேண்டும் என்ற வரம்பினை நீக்கிவிட அரசு உத்திரவிட்டுள்ளது. 5–5–1971 தேதியிட்ட சமூகநலத் துறை அரசாணை 577-ல் இதனைக் காணலாம்.

பிற்பட்ட வகுப்பு மாணவர்கள், உணவு உறைவிட வகை அல்லாத உபகாரச் சம்பளங்களைப் பெற்று வரும் நிலையில், அதனை உணவு உறைவிட உபகாரச் சம்பளமாக மாற்றிக் கொள்ள விரும்பும் போது, புதிதாக மனுச் செய்ய வேண்டும் என்ற நிலை இருந்து வந்தது. அதனை அரசு இப்போது மாற்றி, புதிதாக மனுச் செய்ய அவசியமில்லாமல் வேண்டுமான சில தகவல்களைப் பெற்றுக் கொண்டு உணவு உறைவிட உபகாரச் சம்பளம் வழங்க வகை செய்திருக்கிறது. சமூக நலத்துறையின் 30–3–1971 தேதியிட்ட அரசாணை 441-ல் இதன் விவரம் காணலாம்.

பிற்பட்ட வகுப்பு மாணவர்கள், பட்ட மேற்படிப்பு, சட்டம், தமிழ் வித்வான் முதலிய 57 பாட முறைகளைப் பயில்வதைப் பொறுத்த வரை படிப்பு உதவித் தொகை எவ்வளவு பேருக்கு வழங்கப்படும் என்பதில் எந்தெந்த பாட முறைகளுக்கு எத்தனை பேருக்கு உதவி என்பதில் ஒருமேல் வரம்பு இருந்து வந்தது. அந்த வரம்பை நீக்கிவிட்டு, தகுதி உள்ள மாணவர்கள் அனைவரும் உதவி பெற வகை செய்து அரசு உத்தரவிட்டுள்ளது. சமூக நலத்துறையின் 19–12–1969 தேதியிட்ட அரசாணை எண் : 948-ல் இந்த விவரம் அறியலாம்.

திருநெல்வேலி மாவட்டம் இந்து பரவன் (மீனவர்) சமூகத்தினர் மிகப்பிற்பட்ட வகுப்பினர் பட்டியலில் உள்ளனர். இவ்வகுப்பு மாணவர்களுக்கு உணவு, உறைவிட உபகாரச் சம்பளங்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குத் தருவது போன்று தரப்பட வேண்டும் என்று அரசு உத்தரவிட்டுள்ளது. சமூக நலத்துறை 16–10–1969 தேதியிட்ட அரசாணை எண் : 751-ல் இதன் விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மதிப்பெண்கள்

பிற்பட்ட, மிகப்பிற்பட்ட வகுப்பு மாணவர்களை உபகாரச் சம்பள உதவிக்கு உரியவர்களாகத் தெரிந்தெடுப்பதில் இவர்கள் முறையே 50 சதவிகித மதிப்பெண்களும், 45 சதவிகித மதிப்பெண்களும் பெற்றிருக்க வேண்டும். என்ற நிலை முன்பு இருந்தது. அரசு 1969-ஆம் ஆண்டில் அதனை மாற்றி இந்த இரு வகுப்பினரும் உபகாரச் சம்பளம் பெற 40 சதவிகித மதிப்பெண்கள் பெற்றிருந்தாலும் போதும் என்று உத்தரவிட்டது. சமூக நலத்துறையின் 28–6–1969 தேதியிட்ட அரசாணை எண்: 343-ல் இதனைக் காணலாம்.

பர்வதராஜ குலம் (பட்டணவன், செம்படவன்) சமூகத்தைச் சேர்ந்தவர்கள் மிகப் பிற்பட்ட வகுப்பினர் பட்டியலில் 1967–68 முதல் சேர்க்கப்பட வேண்டும் என்றும், இவ்வகுப்பு மாணவர்களுக்கு, தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு உள்ளது போல் உணவு உறைவிட உபகாரச் சம்பளங்கள் வழங்கப்பட வேண்டும் என்றும் உள்துறை 8–2–1967 தேதியிட்ட அரசாணை 420 மூலம் அரசு உத்தரவிட்டுள்ளது.

சலவைத் தொழிலாளர்கள், மருத்துவர் ஆகியோர் மிகப் பின்னடைந்த நிலையில் இருப்பதால், இவ்வகுப்புகளைச் சேர்ந்த மாணவர்கள் உணவு, உறைவிட உபகாரச் சம்பளங்களை, தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு உள்ள அளவில் பெற்று வருவார்கள் என்று தொழில்—தொழிலாளர், கூட்டுறவுத் துறையின் 22–11–1956 தேதியிட்ட அரசாணை 4935 கூறுகிறது.

இணைப்பு 2

பிற்பட்ட வகுப்பினர் பட்டியல்

தமிழ்நாடு மாநிலம் முழுவதற்கும்.

1. அகமுடையர்—
   (அ) முக்குலத்தோர் வகுப்பினைச் சேர்ந்த தென் மாவட்டங்களில் வாழும் அகமுடையர்.
   (ஆ) வட மாவட்டங்களைச் சேர்ந்த அகமுடையர்.
   (இ) தொழு அல்லது துளுவ வேளாளர்.
2. அம்பலக்காரன்
3. ஆண்டிப்பண்டாரம்
4. அர்ச்சகரை வேளாளர்
5. படகர்
6. பெஸ்தர், சிவியர்
7. பட்ராஜு
8. பில்லவா
9. பொண்டில்
10. போயர், ஒட்டர்
11. தாசரி
12. தொம்மாரா
13. தேவாங்கர் (சேடன்)
14. துடிகுலா
15. ஏனாதி
16. எரவல்லர்
17. கங்கவார்
18. கவரை, வடுகன்(வடுவன்), (கம்மா, பலிஜா, காப்பு மற்றும் ரெட்டி நீங்கலாக).
19. கௌடர் (கம்மாள கலாலி உள்பட)
20. கிறிஸ்துவ மதம் மாறிய தாழ்த்தப்பட்டோர்.
   (அ) தாமே மதம் மாறியவர்களுக்கு மட்டும்-கல்வி நிறுவனங்கள் அரசுப் பணிகளில் ஒதுக்கீடு.
   (ஆ) கிறிஸ்துவ மதம் மாறிய தாழ்த்தப்பட்டோர், கல்வித் துறையில் சம்பளச் சலுகை மற்றும் உபகாரச் சம்பளம்.
21. ஹெக்டே
22. இடிகா
23. இல்லத்துப் பிள்ளைமார்
24. இசை வேளாளர் அல்லது மேளக்காரர்
25. ஜாம்பவானோடை

26. ஜங்கம்
27. ஜெட்டி
28. ஜோகி
29. கப்போரா
30. கம்பர்
31. காடுபட்டர்கள் (மலபார்)
32. கைக்கோளர், செங்குந்தர்
33. கலிங்கி
34. கள்ளர்
35. கல்வேலி கவுண்டர்
36. கம்மாளன் அல்லது விஸ்வகர்மா மற்றும் விஸ்வகர்மாளா (தட்டான், பொற்கொல்லர், கண்ணர், கருமான், கொல்லன், தச்சன், கல் தச்சன் உள்பட).
37. கணி, கணிசு, காணியர், பணிக்கர், கன்னடியர்
38. கன்னிட சைனிகர்
39. கடேசன் அல்லது பட்டம் கட்டி
40. கவுத்தியன்
41. கேரள முதலி
42. கார்வி
43. கத்ரி
44. கோயம்புத்தூர் மாவட்ட கொங்கு செட்டியார்கள்
45. கோப்பல வேலம்மா
46. கொராச்சா
47. கோட்டேயர்
48. குலாலா (குயவர், கும்பாரன் உள்பட)
49. குஞ்சிடிகர்
50. குன்னூவர் மன்னடி
51. குரும்பர்
52. குருகினி செட்டி
53. லப்பை
54. லம்பாடி
55. பிராமணரல்லாத மராட்டியர் (நாம்தேவ் மராட்டியர் உள்பட).
56. மலையன்
57. மாப்பிள்ளா
58. மாலி
59. மறவர்
60. மருத்துவர், நாவீதர், மங்களா, விலக்கத்தலவன் நாயர், பரஞேபகாரீ.
61. மணியகார்
62. மவுண்டாடன் செட்டி
63. மகேந்திர, மேதரா
64. முக்குவன் அல்லது முகயன்
65. முட்லகம்பட்டி
66. முத்துராஜா (முத்து ராசா, முத்திரியர்)
67. நாடார், சாணுன், கிராமணி

68. நகரம்
69. நரிக்குறவன்
70. நோக்கர்
71. ஒடியா
72. ஓவச்சர்
73. பாமுலு
74. பாணன்
75. பண்ணையார்
76. பரவன்
77. பரவன் கிறிஸ்தவர் (கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை தாலுகா).
78. பார்க்கவ குலம் (சுருதிமான், மலையமான், நத்தமான்)
79. மீனவர் (பர்வதராஜகுலம், பட்டணவார், செம்படவன்)
80. பெரிக்கி
81. பொரயா
82. புல்லுவன்
83. புண்ணுன், வேட்டுவ கவுண்டர்
84. புசலா
85. ராஜபுரி (முந்திய தென்கன்னட மாவட்டம்)
86. ரெட்டி (கஞ்சம்)
87. சாதுச் செட்டி (தெலுங்குச் செட்டி, தெலுங்குப்பட்டிச் செட்டி, 24 மனைத் தெலுங்குச் செட்டி).
88. சாலியர் (பத்மசாலி, பட்டுசாலி, பட்டாரியர், அடவியர்)
89. சாத்தாத ஸ்ரீவைஷ்ணவா (சாத்தானி உள்பட)
90. சேனைத் தலைவர், சேனைக்குடையார், இலைவாணியர்
91. சௌராஷ்டிரா (பட்டுநூல்காரன்)
92. சோழிய செட்டி
93. ஸ்ரீசயன்
94. தியா (முந்திய மலபார் மாவட்டம், பொன்னனி, பாலக்காடு, வள்ளுவநாடு மற்றும் ஏரநாடு).
95. தொகட்ட வீர க்ஷத்திரியா
96. துளுவ நாய்க்கர், வெத்தலகார நாய்க்கர்
97. தொரையன்
98. தொட்டிய நாய்க்கர் (ராஜகம்பலம்) கொல்லவர், சில்லவர் தொக்கலவர், தொளுவ நாயக்கர்.
99. தொண்டமான்
100. உப்பரா
101. ஊராளி கவுண்டர் (மாநிலம் முழுவதும், ஒருதாய கவுண்டர், மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி மாவட்டங்கள் மட்டும்).
102. வலையர்
103. வால்மீகி
104. வாணியர், வாணிய செட்டியார் (கண்டலா, கனிகர், தெலிகுலா, செக்காளர் உள்பட).
105. வண்ணுன் (சலவைத் தொழிலாளர்)

106. வன்னியகுல க்ஷத்திரியர், (வன்னியர், வன்னியா, வன்னிய கவுண்டர், படையாச்சி, கவுண்டர், கண்டர், பள்ளி உள்பட)
107. வேடன்
108. வெள்ளன் செட்டியார்
109. வேட்டைக்காரன்
110. வேட்டுவ கவுண்டர்
111. வீரகோடி வேளாளர் (பழைய புதுக்கோட்டை சமஸ்தானம் தஞ்சாவூர் தாலூகா, திருச்சிராப்பள்ளி தாலூகா மட்டும் பணி செய்வான் நீங்கலாக).
112. ஒக்கலிகர் (வக்கலிகர், காப்பிலியர், காப்பிலியா, ஒக்கலிக கவுடர், ஒக்கலிக கவுண்டர்)
113. வைநாடு செட்டி (நீலகிரி மாவட்டம்)
114. யாதவர் (இடையன், தெலுங்கு பேசும் வடுக ஆயன், வடுக இடையன், கொல்லர், மொண்டு கொல்லர், ஆஸ்தாந்திர கொல்லர் அடங்கலாக).
115. யோகீஸ்வரர்
116. எருகுலா

மிகப் பிற்பட்ட வகுப்பினர் பட்டியல்

1. அம்பலக்காரர்
2. ஆண்டிப்பண்டாரம்
3. பெஸ்தா, சிவியர்
4. பட்ராஜு (க்ஷத்திரிய ராஜு அல்லாதார்)
5. போயர், ஒட்டர்
6. தாசரி
7. டொம்மாரா
8. எரவல்லர்
9. இசை வேளாளர் அல்லது மேளக்காரர் (தஞ்சாவூர் மாவட்டடத்தில்).
10. ஜாம்பவானோடை
11. ஜங்கம்
12. ஜோகி
13. கோயம்புத்தூர் மாவட்ட கொங்கு செட்டியார்கள்
14. கொராச்சா
15. குலாலா, குயவர் மற்றும் கும்பாரன்
16. குன்னூரவர் மன்னாடி
17. குரும்பர்
18. குருகினி செட்டி
19. மருத்துவர், நாவிதர், மங்களா, விலக்கத்தலவன், விலக்கத் தலவ நாயர், பரனோபகாரி.
20. மொண்டு கொல்லா
21. மவுண்டாடன் செட்டி
22. மகேந்திர மேதரா

23. முட்லகம்பட்டி
24. நரிக்குறவன்
25. நோக்கர்
26. வன்னியகுல க்ஷத்திரியர், வன்னியர், வன்னியா, வன்னிய கவுண்டர், கவுண்டர் அல்லது கண்டர், படையாச்சி, பள்ளி உள்பட
27. பரவன்
28. மீனவர், (பர்வதராஜகுலம், பட்டணவான், செம்படவன்)
29. புண்ணன் வேட்டுவ கவுண்டர்
30. சாத்தாத ஸ்ரீவைஷ்ணவா (சாத்தானி உட்பட)
31. சோழிய செட்டி
32. தெலுங்கு பட்டிச் செட்டி
33. தொட்டிய நாய்க்கர் (ராஜகம்பலம், கொல்லவர், தொழுவ நாய்க்கர்)
34. தொண்டமான்
35. வலையன்
36. வண்ணான் (சலவைத் தொழிலாளர்)
37. வேட்டைக்காரன்
38. வேட்டுவக் கவுண்டர்
39. யோகீஸ்வரர்

கன்னியாகுமரி மாவட்டம், திருநெல்வேலி மாவட்டத்தின் செங் கோட்டை வட்டம் இப் பகுதிகளுக்கு மட்டும் உரித்தான திருத்தியமைக் கப்பட்ட பட்டியல்.

1. ஆழ்வார்
2. அரயன் (நுலையன்)
3. ஆரியவத்தி
4. சவலக்காரன்
5. செட்டு அல்லது செட்டி, கோட்டார் செட்டி, ஏழூர் செட்டி, பாத்திரச் செட்டி, வளையல் செட்டி, மற்றும் புதுக்கடை செட்டி
6. எழுத்தச்சன்
7. ஏழவாத்தி
8. ஈழவர்
9. கலாரி குருப் (கலாரி பணிக்கர்)
10. குடும்பி
11. நாய்க்கன்
12. ஓடன்
13. பெரும்கொல்லன்
14. சக்கரவர் (காவதி)
15. தொல்கொல்லன்
16. வீர சைவர்
17. வேலுத்தடத்து நாயர்

18. கிருஷ்ணவாகா
19. லத்தீன் கத்தோலிக்கர்கள்
20. முன்னுள் எஸ். ஐ. யு. சி.யைச் சேர்ந்த சி. எஸ். ஐ.
கீழ்க்கண்ட சாதிகள் கல்வி நிறுவனங்களில் இடங்கள் ஒதுக்கீட்டுக்கும் அரசுப் பணிகளில் வேலைகளுக்கும் மட்டும் பிற்பட்ட வகுப்புக்களாகக் கருதப்படுகின்றன.

1. கன்னியாகுமரி மாவட்டம், திருநெல்வேலி மாவட்டத்தில் செங்கோட்டை வட்டம், ஆகியவைகளைச் சேர்ந்த பரவண் கிறிஸ்தவர்.
2. லத்தீன் கத்தோலிக்கர்
3. கிருஷ்ணவாகா
4. சி. எஸ். ஐ. (முன்னுள் எஸ்.ஐ.யு.சி.)

தமிழரசு

இலவச இணைப்பு

